T.N.A

304

R41
N48

147895

147895

உருத்திராக்க விளக்கம்

51

R41
N18
147895

கடவுள் துணை

# உருத்திராக்கவிளக்கம்

(ஒழுக்கநூல் பிரிவு--2)

23 JUL 1
MADRAS




BY

துடிசைகிழார், அ. சிதம்பரனர்
M. T. A. S.; M. S. S. C.; M. T. S.

செங்கல்பட்டு சைவ சமயாபிவிருத்தி சபையாரால்
பலருக்கும் உபயோகமாகும் பொருட்டு வெளிப்படுத்தப்பட்டது.

MADRAS:
PRINTED BY HOE & CO., AT THE 'PREMIER' PRESS,
STRINGER'S STREET, GEORGETOWN.

1918.

R41
N18
142895

# உருத்திராக்க விளக்கம்.

23 JUL 1918

(ஒழுக்கநூல் பிரிவு—2)

இது

ஆதிசைவப் பரம்பரையில் வந்த

துடிசைகிழார் அ. சிதம்பரனர்

M.T.A.S., M.T.S., AND M.S.S.C.

என்பவரால்

பல நூல்களினின்றும் அவ்வப்போது குறித்து வைத்திருந்ததை

சேங்கல்பட்டு

சைவ சமயாபிவிருத்தி சபையாரால்

பலருக்கும் உபயோகமாகும் பொருட்டு

வெளிப்படுத்தப்பட்டது.

சென்னை :

ஷோ அண்டு கம்பெனி 'பிரீமியர்' அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1917.

181·48

147895

600 008

Stand upright, speak thy thought, declare
The truth thou hast, that all may share;
Be bold, proclaim it everywhere,
They only live who dare!

—Morris.

# ஆதார நூல்கள்.

---

1. காமிகம் (ஆகமம்)
2. காரணம் ( ,, )
3. வாதுளம் ( ,, )
4. திரிபுர தாபினி யுபநிடதம்.
5. திரிபுரோபநிடதம்.
6. உருத்திராக்கஜாபால உபநிடதம்.
7. அக்ஷமாலிகா உபநிடதம்.
8. உபதேசகாண்டம்.
9. தணிகைப் புராணம்.
10. பேரூர்ப்புராணம்.
11. விருத்தாசலப் புராணம்.
12. சீகாளத்திப் புராணம்.
13. கடம்பவன புராணம்.
14. திருக்கூவப் புராணம்.
15. பிரமோத்தரகாண்டம்.
16. சிவதருமோத்திரம்.
17. சைவபூஷணச்சந்திரிகை.
18. சைவசமய விஞவிடை.
19. வைத்திய சாரசங்கிரகம்.
20. தாயுமானவர் பாடல்.
21. தேரையர் வைத்தியநூல்.
22. தமிழுலகம்.
23. திருப்போரூர்ச் சந்நிதிமுறை.
24. உருத்திராக்கவிசிட்டம்.
25. பெருந்திரட்டு.
26. திருவாசகம்.
27. தேவாரம்.
28. சைவசமயநெறி.
29. அக்கதீபிகை.
30. வாயுசங்கிதை.
31. லிங்காபட்டீயம்.
32. சமஸ்கிருத அகராதி.
33. அமரம்.
34. மொழிநூல்.
35. கந்தப்புராணம்.
36. சதுரகராதி.
37. கொல்லிமலை நிகண்டு.
38. மலையகராதி.
39. பிங்கலந்தை.
40. திருமந்திரம்.
41. திருவுந்தியார்.
42. Christian Bible.
43. திருத்துடிசைப்புராணம்.

23 JUL 191
MADRAS

## உ ள் ளு ரை.


இயல் (1) உருத்திராக்கம் தரிக்கவேண்டுமா?
" (2) உருத்திராக்க உற்பத்தி.
" (3) " வகையும், பெயரும், காரணமும்.
" (4) " குணமும் பலனும்.
" (5) " அணியும் காலம், இடம், முறை.

23 JUL 1918
MADRAS

# பதிப்புரை.

அன்பர்களே! இந்நூல் உருத்திராக்க விளக்கம் எனப் பெயர் பெறும். அதன்பெயருக் கேற்பப் பொருள்கள் விளக்கப்பட்டிருப் பதை நீங்கள் இச்சிறுநூலை வாசிக்கும்போது அறிவீர்கள். இந் நூல் ஐந்து இயல்களால் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இதுவரை எழுதப்பட்ட நூல்களில் இல்லாத சங்கதிகளை இந்நூல் என்ன கூறப்போகின்றது என்று நினையாதீர்கள். இது வரை அந்நூல்களில் பார்க்காத விடயங்களே காண்பீர்கள். புதிய சங்கதிகளென்றால் ஆதாரமற்றது என்று எண்ணவேண்டாம். ஆதாரங்கொண்டதே. அறிவுக்கு அமைந்ததே.

முதன்முதல் இதில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் சில பௌராணிக மதத்தினர்க்கு விரோதமானவைபோல் காணப்படுமே யல்லது உண்மையில் அப்படியில்லை. நடுநிலைமைவாய்ந்த ஒவ் வொருவருக்கும் இந்நூல் ஒப்பமுடிந்ததே.

இந்நூலை யியற்றிய திருத்துடிசைகிழார் அ. சிதம்பரனார் என்பவர் சைவசித்தாந்த நூற்பயிற்சியோடு, ஆங்கில, சமஸ்கிருத நூற் களின் பயிற்சியும் சரித்திர, ககோள, பூகோள, வைத்திய, சோதிட பௌதிக சாஸ்திரங்களின் பயிற்சியும் உள்ளவர்.

திருத்துடிசைப் புராணம், விபூதிவிளக்கம், சிவஞானபோத முதனூல் விளக்கம், அர்ச்சுனனும் பாண்டிய மரபும், சுந்திரமூர்த்தி நாயனார் சரித்திரவிளக்கம் முதலிய அநேக நூல்களை வெளியிட் டிருக்கிறார். அவர் குறித்துவைத்திருந்த விபூதியைப்பற்றிய வர லாற்றினை உத்திரன்மேரூர்ச் சைவசித்தாந்த சபையார் வெளி யிட்ட நாண்முதல் நாங்கள் அவரை அவர் குறித்துவைத்திருந்த உருத்திராக்கத்தைப்பற்றிய வரலாற்றினைப் பிரசுரம் செய்யக் கொடுக்கும்படி பலகாலும் வேண்டிக்கொண்டதின்பேரில் பலரும்

அறிந்து இன்புறும் வண்ணம் அவர் கொடுத்த இச்சிறு நூலினை அச்சுவாகனம் ஏற்றினேம்.

இந்நூல் படிக்கப்படிக்கத் தெளிவாகவும், இனிமையாகவும் புதுமையாகவும் இருக்கும் என்பதில் தடையில்லை.

விபூதி உருத்திராக்கங்கள் ஒருசமயத்திற்குமாத்திரம் உரித்தானவைகள் அல்ல, எல்லா மதத்தினரும் எல்லா ஜாதியாரும் தரிக்கக்கூடியவைகள் என்றும் சைவத்திற்குமாத்திரம் உரித்து என்று நினைப்பது தவறு என்றும் நூலாசிரியர் காட்டியிருப்பது மிகவும் அருமையானது.

ஒவ்வொரு சைவசித்தாந்த சபைகளிலும் விபூதி விளக்கத்தினையும் உருத்திராக்க விளக்கத்தினையும் பையன்களுக்குப் பாடமாக ஏற்படுத்திக் கற்பித்துவந்தால் உண்மையான அறிவு ஏற்படும்.

இதுபோல் அநேக நூல்கள் எழுதப்பட்டுவருவதால் தமிழர்கள் ஒவ்வொருவரும் இதைவாங்கி மற்ற நூல்களை வெளியாக்க உதவிபுரிவார்களென எல்லாம் வல்ல இறைவனடியைச் சிந்திக்கின்றோம்.

செங்கல்பட்டு சைவ சமயாபிவிருத்தி சபையார்.




திருவாளர் துடிசைகிழார் அ. சிதம்பரனார்

M.S.S.C. M.T.S. AND M.T.A.S.

23 JUL 1918
MADRAS

# முன்னுரை.

அன்பர்களே! நான் எட்டாவது வகுப்பில் (IV form) வாசித்த காலத்து நன்னூல் என்னும் பவணந்தியார் இலக்கணம் பயிலத் தொடங்கினேன். எனது கல்லூரித் தமிழ்ப் பண்டிதராயிருந்தவர் எனக்கு நன்னூலில் "பன்னீருயிரும் * * " என்ற சூத்திரத்தைக் கற்பிக்கும்பொழுது உயிர் வருக்கத்தில் எல்லா உயிரெழுத்துக் களும் மொழிக்கு முதலில் வரும், உயிர்மெய்யெழுத்துக்களில் 10 எழுத்துக்கள் மாத்திரம் மொழிக்கு முதலில் வரும் என்று கற்பித் தார். மற்ற எட்டு எழுத்துக்களும் வாராமைக்குக் காரணம் என்ன என்று கேட்டேன். சூத்திரத்தில் வராது என்று சொல்லியிருக்கி றது அதனால் வராது என்றார். இலக்கியங்கண்டதற்கிலக்கணந் தானே யொழிய வேறில்லையே, காரணமிருந்துதானே சூத்திரம் செய்திருக்கவேண்டும், கண்ணை மூடிக்கொண்டு நூல் எழுதியிருப் பாரா? ஆகையால் அக்காரணத்தைச் சொல்லவேண்டும் என்றேன். "போக்கிறி! உட்கார்" என்றார். பிறகு என் மனதில் மாத்திரம் இக்கேள்வி நீங்காமலே இருந்தது. வீடுசென்று சும்மா இருக்கும் காலத்திலெல்லாம் தொல்காப்பியம், வீரசோழியம், தொன்னூல் முதலிய தமிழிலக்கணங்களை ஆராய்ந்தேன்.

அப்போது நன்னூலுக்கும் மற்றைய இலக்கணங்கட்கும் சில வேறுபாடுகள் கண்டேன். பவணந்தியார், தமிழிலக்கணங்க ளாகிய குமரம், அகத்தியம், ஐந்திரம், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களைச் சிறுபான்மை பின்பற்றியும், சமஸ்கிருதபாஷை யின் இலக்கணமாகிய பர்ணினீயத்தைப் பெரும்பான்மை ஒட்டி யும் நன்னூலை எழுதினதாகத் தெரியவந்தது.

அப்படி அவர் எழுதினதற்குக் காரணம் என்னவென்றாற் கூறுதும். ஜைனர்களுடைய காலம் பிராமணமதம் இந்தியாவின் தென்பாரிசமாகிய தமிழ்நாட்டில் பரவிய பிற்றைக்காலம் என்பது

சரித்திர நூற்றுணிபு. தமிழ்நாட்டிலுள்ள தமிழர்களில் எல்லா வகுப்பாருள்ளும் அநேகர் பிராமணமதத்தைத் தழுவிக்கொண்டார்கள். பிறகு அனேகர் ஜைனர்களுடைய காலத்தில் ஜைன மதத்தைத் தழுவிக்கொண்டார்கள். பிராமண மதத்திலிருந்தும் அனேகர் ஜைனமதத்தைத்தழுவினார்கள். ஜைனர்களுக்கு பிராமண வேதங்களாகிய இருக்குமுதலியனவும் தமிழ் வேதாகமங்களும் பிரமாணமே. ஜைனப்புலவர்கள்தான் தமிழையும் சமஸ்கிருதத்தையும் கலந்து வைத்தது, மணிப்பிரவாளம் என்னும் கலப்பு நடையை உண்டுசெய்தது. மணிப்பிரவாளத்திலேயே அனேக நூல்கள் ஜைனப்புலவர்கள் எழுதியிருக்கிறார்கள். அக்காலத்தில் தான் சமஸ்கிருத பதங்கள் ஏராளமாய்த் தமிழில் வந்தேறின. ஆகையால் ஜைனப்புலவராகிய பவணந்தி பாணினீயத்தைப் பின்பற்றி நன்னூலில் அனேகசூத்திரங்கள் செய்தது அக்காலத்து இயற்கையினாலேதான். ஆகையால் தமிழ் சமஸ்கிருத இலக்கணங்களின் வழிநூலே நன்னூல் என்று கூறுவதில் யாதொரு இழுக்கும் இல்லை.

சரித்திர நூற்பயிற்சி வலியினைக்கொண்டு எழுத்தையும் சொல்லையும் ஆராயப்புகுந்த விடத்து உருத்திராக்கம் என்னும் வார்த்தையினைப் பற்றி என் மனதில் தோன்றியதை எல்லோருக்கும் பயன்படும்பொருட்டுத் தொகுத்துவைத்தேன்.

நான் இந்நூலின்கண் புராணவரலாற்றினைக்கண்டித்து எழுதியிருப்பதைநோக்க அநேகருக்கு முதலில் ஒருவிதமாய்த்தோன்றக் கூடும். அவர்களெல்லாம் சற்று நிதானித்துச் சரித்திரவாயிலாகவும், மருத்துவநூன்முறையாகவும், பௌதிகசாத்திர முறையாகவும் பார்த்தால் விரோதமின்மை தெரிவார்கள்.

உலகத்தில் சைவசமயமானது சிலர் நினைக்கும் வண்ணம் ஒரு தனித்த சமயமல்ல. எல்லாமதங்களையும் தன்னுட்கொண்ட ஒப்பற்ற ஒருமதம். அதுபோல விபூதி உருத்திராக்கங்களாகிய சைவ சமயச்சின்னங்களும் சைவர்களுக்கே உரித்தல்ல. எல்லா ஜீவகோடிகளும் அணிந்துக்கொள்ளக்கூடிய பொதுவான சின்னங்

கள் என்று கலைஞான ஆராய்ச்சி வாயிலாக நிரூபித்திருக்கிறேன். ஆகையால் உலகத்துள்ள எல்லா மதத்தினரும் இந்நூலை வாங்கி வாசித்து முரண்பாட்டை ஒழித்து, சமத்துவபுத்தி வாய்ந்து பேரின்பப்பெருவாழ்வை யடைவார்கள் என்ற முழுநம்பிக்கையுடன் இந்நூலை வரையலுற்றேன்.

இன்னும் இதுபோன்ற நூல்கள் அனேகம் எழுதிக்கொண்டு வருகிறேன். ஆதலால் தமிழர் ஒவ்வொருவரும் இதைவாங்கி வாசித்து என்னை ஊக்குவிக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

துடிசைகிழார் - அ. சிதம்பரனார்.

———

23 JUL 1918

# உருத்திராக்க விளக்கம்.

## முதலாம் இயல்.

### உருத்திராக்கம் தரிக்கவேண்டுமோ?

அனாதி ஆணவத்தால் கட்டுப்பட்ட ஆன்மாக்களுக்கு இறைவர் தம் கருணையால் தனு, கரண, புவன, போகங்களை அளிக்கின்றார். எதற்காக அளிக்கின்றார்? அவைகளைக்கொண்டு மலத்தைப் போக்கித் தம்முடைய திருவடி நிழலை அடையும்பொருட்டு.

தனு என்பது உடல், உரு, தேகம், அச்சு, பிறவி, கட்டை, காயம், சென்மம், சட்டை, வடிவு, சரீரம், கஞ்சுகம் எனப் பல பொருள்படும்.

எல்லாப் பிறப்புக்களிலும் மானிடப்பிறப்பு கிட்டுதல் அரிதினும் அரிது. இஃது, நம் ஔவைப் பிராட்டியார் வாக்கால் தெளியலாம்.—*Vide* "அரிது அரிது மானிடராதல் அரிது." அரிது அரிது என்று வற்புறுத்தி இருமுறை கூறியிருப்பதைக் கவனித்தால் மானிடதேகத்தின் அருமை தெரியலாம்.

அரி, அயன் முதலிய தேவர்களுடைய பிறவியுங்கூட மானிட சென்மத்துக்கு ஈடாகாது. அத்தேவர்களெல்லாம் பூமியில்போய் மானிட தேகத்தை எடுத்து இறைவனை ஆராதிக்க வேண்டுமென்று தவங்கிடக்கின்றார்கள்.

*Vide.*

"புவனியிற்போய்ப் பிறவாமையினாளும்
போக்குகின்றோமவமே, யிந்தப்பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்றுநோக்கித்
திருப்பெருந்துறை யுறைவாய்! திருமாலாம்

அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்
படவுநின்னலர்ந்த மெய்க்கருணையு நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ளவல்லாய்
ஆரமுதே பள்ளியெழுந்தருளாயே."

ஆகையால், மானிடப்பிறவியானது கிடைக்கத்தகுந்ததல்ல. அருமையாகக் கிடைத்த பிறவியை நாம் வீணாகப்போக்குகின்றோம். இதை உற்று நோக்குவார்க்கு நெஞ்சது பகீரென்னும். இந்தமானிடப் பிறவியே நமக்கு, மறுபடியும் கிடைக்கும் என்பது நிச்சயம் இல்லை. "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என்னும் ஆப்தர் மொழியைக் கவனிப்பவர்கள் ஒரு க்ஷணமேனும் வீண்காலம் போக்க விரும்பார்கள்.

அந்தோ! இவ்வுலகின்கண் எவ்வளவோ ஆயிரம்பேர் வீண் காலம் போக்குவதைப் பார்க்கும் போது மனம் பதைக்கின்றது. என்னே! அவர்களுடைய அறிவு இருந்தவாறு என்று ஏங்குகின்றது.

"அத்திப்பழமும் அரைக்கீரை நல்வித்தும்
கொத்தி யுலைப்பெய்து கூழிட்டுவைத்தனர்
அத்திப்பழத்தை அரைக்கீரை வித்துண்ணக்
கத்தியெடுத்தவர் காடுபுக்காரே."

*Vide* திருமந்திரம், 160.

(இ-ள்.) பரமகருணாநிதியானவர் மலத்தால் கட்டுண்ட ஆன்மாவுக்குச்சரியான தனு கரணங்களைத் தெரிந்தெடுத்து கருவிலமைத்துப் புவனபோகங்களைக் கொடுத்துவைத்தனர். ஆன்மாவானது தனு கரண புவன போகங்களின் உதவியினால் மலத்தைப் போக்கி இறைவன் திருவடிநிழலை அடையாமல் புவன போகங்களே பெரிது என்று எண்ணி அவைகளில் அழுந்திவிட்டால் தேகமானது விழுந்துவிடும். விழுந்துவிடவே பந்துக்கள் கூடி அழுதுபாடையில் எடுத்து வைத்துக்கொண்டு சுடுகாட்டுக்கு எடுத்துப் போவார்கள் என்பதே.

புக்காரே என்று இறந்தகாலத்தில் தேற்றேகாரம் கொடுத்துக்கூறினது நிச்சயப்பொருளை உணர்த்தி நின்றது.

இது எதுபோல என்றால் கூறுதும். நாம் கட்டிக்கொள்ளும் துணியின் அழுக்கைப்போக்க உவர்மண் சேர்க்கிறோம். உவர்மண் சேர்த்து உடனே சலவை செய்துவிட்டால் வஸ்திரமானது அழுக்கு நீங்கி அனேககாலம் இருக்கும். அப்படியில்லாமல், உவர் மண்ணை அப்படியே விட்டுவிட்டால் வேஷ்டி இத்து (நைந்து) ப் போய்விடும்.

இக்கருத்தைத் தழுவியே திருவுந்தியாரிலும்—

" முத்திமுதலுக்கே மோகக்கொடிபடர்ந்து
அத்திபழுத்த தென்றுந்தீபற
அப்பழமுண்ணாதே யுந்தீபற "

*Vide* திருவுந்தியார்.

(இ-ள்.) முத்தியைப் பெறுகைக்கு முதன்மையான ஆன்மாவிலே அநாதியே மறைக்கத்தக்க ஆணவமலத்தின் காரியமான அஞ்ஞான மென்னுங்கொடி வெகுவிதமாகப் படர்ந்து இதாகிதமே விளைந்து இது காரணமாக மயக்கத்தைச் செய்கிற மாய்கையாலே பூதகாரியமான உடம்பு ஜனனந்தோறும் பலியாநிற்கும்.

இந்தப்பழத்தையருந்தி நரக ஏதுவாகாதே. பழம் அருந்தலாவது புவனபோகங்களை மெய்யென்றெண்ணி அவைகளில் அழுந்தி ஆனந்தித்து நிற்றல்.

இதே கருத்தைத்தான் விவிலிய சமயநூலிலும் கூறியிருக்கிறது. ஆதியில் தேவன் ஆதாம் என்பவருக்கு (Forbidden Fruit) பழம் உண்ணாதே என்று கட்டளையிட்டிருக்க தேவனுடைய கட்டளையை மீறி அப்பழத்தை உண்டதால் ஆதாமுக்குப் பூமியில் பிறக்கநேர்ந்தது என்று கூறியிருப்பதைப்பாருங்கள். அக்கருத்து சித்தாந்தத்திற்கு ஒத்ததே. அதனால்தான் சைவசமயம் எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது என்று

சொல்லுவது. ஆகையால், நண்பர்களே! இறைவனால் நமக்கு அருமையாகக் கிடைத்தபிறவியை சரியானபடி உபயோகிக்கப் பிரயாசைப்படுங்கள். வயிற்றுப்பாட்டிற்கே உழைத்துப் பிறவியை வீணாக்காதீர்கள். ஒருநாளைக்கு அரைக்கணமேனும் வந்தகாரியத்தைப்பாருங்கள்.

இதை உத்தேசித்தே நம் தாயுமானவர் அடியில் வருமாறு கூறுகிறார்:—

" வந்த வரவை மறந்து—மிக்க
மாதர் பொன் பூமி மயக்கத்திலாழும்
இந்த மயக்கை யறுக்க—எனக்
கெந்தை மெய்ஞ்ஞான வெழில்வாள் கொடுத்தான்."

வந்த காரியமாவது என்னவென்றால் தனு கரணங்களால் புவன போகங்களை அனுபவித்து, மலத்தைப்போக்கி, முத்தியை அடைய வழி தேடுவதுதான்.

" உடம்பினாற்பெற்ற பயனாவதெல்லாம்
திடம்பட வீசனைத்தேடு."

என்றபிரகாரம் நாம் உடம்பெடுத்ததின் பயன் ஈசனை நாடி நிற்பதுதான். ஆகையால் ஈசனைத் தேடுவதற்கு உடம்பு இல்லாவிட்டால் தேடமுடியாது. ஆகையால் சிவபெருமான் திருவருளை நாம் அடையவேண்டுமானால் முதலில் நமக்குத் தேகம்வேண்டும். தேகம்கிடைத்தால் மாத்திரம்போதாது அறுபது நாழிகையும் பிணி மூண்டு உழலும் தேகத்தையும், கூன், குருடு, பேடுதங்கிய தேகத்தையும் பெற்று என்பயன்? ஆகையால் பிணியின்றி தேகம் சௌக்கியமான நிலையில் இருந்தால்மாத்திரம் முத்திக்குவழி தேடுதற்குச் சௌகரியம். ஐயோ! உலகத்தில் எத்தனைபேர் பொற்கலத்தில் வைப்பதற்குரிய பசுவின்பாலைக் கமரிற் கவிழ்ப்பதை மான, நல்ல தேகத்தையும் நல்ல சௌகரியங்களையும் பெற்றிருந்தும் அவ்வழியிற் செல்லுகிறார்கள் பரிதாபம்!

மனிதர்கள் செய்யவேண்டிய காரியங்கள் இரண்டு :—ஒன்று தேகத்தைப் பாதுகாப்பது, இன்னொன்று தேகத்தைக்கொண்டு ஈசனை அறிவது.

சிலர் கூறும்வண்ணம் "இது பாழும் குரம்பை, ஒன்பதுவாசல் வீடு, பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை, சோற்றுலடித்த சுவர், சுக்கிலமும் நீரும் சொரிமலமும் நாறுமுடல், மும்மலச் சேருன முழுக்கும்பிபாகம், மலக்கேணி" என்று தேகத்தை இகழ்ந்து போற்றுமல் விட்டுவிடக்கூடாது.

இவைகளெல்லாம் ஞானவான்களின் வார்த்தையே; அவர்கள் கூறினது உண்மையே. அவர்களெல்லாம் அப்பாழும்குரம்பை... ......மலக்கேணியைக் கொண்டே கடைத்தேறிவிட்ட ஜீவன்முத்தர்களாகையால் அவர்கள் தேகத்தை இகழ்வது சகசமே. ஞானிக்கு உடல் மிகுந்த பாரமாகவே யிருக்கும்.

நாமும் அவர்களைப்போல் ஆகும்வரையில் அப்பாழும்குரம்பை......மலக்கேணியைப் போற்றியே வைக்கவேண்டும். "சுவரிருந்தாலல்லவோ சித்திரம் எழுதலாம்" இந்தத்தேகம் இருந்தால் அல்லவோ வேதாந்த சித்தாந்தம் பேசுவதும் மற்றக் காரியங்களைச் செய்வதும். மனிததேகத்தினுடைய அருமை எப்பொழுது தெரியும். இதர தேகங்களில் அவதிப்படும்பொழுது அறிவீர்கள். "நிழலருமை வெயிலிலே தெரியும்" ஆகையால், தேகம் இல்லையானல் நமக்குக்காரியம் கைகூடாது. *Vide* தாயுமானவர்—

"தேகமோ நழுவின் நானுமோ நழுவின்
பின்னும் உய்யும்வகை யுள்ளதோ?"

ஆகையால், மனிதராகிய நாம் ஒவ்வொருவரும் தேகத்தைக் காப்பாற்றும் வழிகளைத் தேடவேண்டும். தேகம் நல்லநிலைமையில் இருக்க நாம் என்ன செய்யவேண்டும்? இரத்தத்தைச்சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும். தினசரி நாம் சாப்பிடுகிற பதார்த்தங்களினுலும், செய்கிற வேலைகளினுலும், நம்மைச் சுற்றிலும் இருக்கிற வாயுக்களினுலும் இரத்தம் கெட்டுவிடும்; இரத்தம் கெட்டால் வியாதியுண்டாகும்; வியாதியுண்டானல் உடல் மாண்டுவிடும்.

ஆகையால், நண்பர்களே! சும்மா சித்தாந்தியெனப் பேர்வைத்துக்கொண்டு தத்துவங்களின் பெயர்களேயும் சித்தியார் முதலிய நூற்களின் பாட்டுக்களேயும் பாராமல் கட கடவென்று ஒப்பிப்பதால் பிரயோசன மில்லே. அதனுல்தேகம் நிலேநிற்காது.

ஆனுல் என்ன செய்யவேண்டும்? சித்தாந்தி என்ற பெயரை வகித்த ஒவ்வொருவனும் முதலில் தன்னுடைய தேகக்கூறுபாடுகளே அறிந்துக்கொள்ள தேகதத்துவ சாத்திரத்தில் (Physiology) கொஞ்சமும், பிறகு தன்தேகத்தை வளர்க்கத்தான் சாப்பிடும் பதார்த்தங்களின் குணங்களேத் தெரிந்துக்கொள்ள தாவர நூலில் (Botany) கொஞ்சமும், தாதுவர்க்கநூலில் (Chemistry) கொஞ்சமும், தினசரி தம்மேல் காயும் சூரியனிடத்திலிருந்து வரும் கிரணங்களின் தன்மையைத்தெரிந்துக்கொள்ள பௌதிக நூலில் (Physical Science) கொஞ்சமும், ககோளபூகோளசாத்திரங்களிற் கொஞ்சமும் தெரிந்துகொண்டு ஒழுக்கநூற்களில் விதித்தபடி விதிவிலக்குகளே அனுசரித்து நடக்கவேண்டும். அதன்பேரில் ஞானநூற்களில் கூறும் வண்ணம் ஒழுகுவானுனல் தேகத்தைப் பாதுகாக்கக்கூடிய வழியைச் சுலபத்தில் அறியலாம்.

மேலேசொன்ன மருத்துவநூன் மாத்திரம் (Botany and Chemistry) பார்த்தசிலர் காயகற்பங்களேச்செய்து நெஞ்சு புண்ணுவரேயொழிய காரியம்கைகூடப்பெறுதவர்கள் ஆவார்கள். "தானுகப்பழுக்காதது தடியாலடித்தால் பழுக்குமா" என்றபழமொழிப்படி அநேக நூற்களேவாசித்து மனம்விரிந்து அடங்கினுல் மாத்திரம் காரியம் கைக்கூடும். குறுக்கு வழியெல்லாம் குருட்டுவழியாய் முடியும். எத்தனேபேர் சோதிவிருட்சப் பால்சாப்பிடவும், ஆறு மாதம்முதல் அனேககாலம் பசியாமல் செய்யக்கூடிய மூலிகைகளேச் சாப்பிடவும் நினேத்து அவைகளேத் தேடி அலேகிறதைப் பார்க்கிறேம்.

ஆகையால், நாம் இவ்வண்ணம் அலேந்து கெட்டுப்போகாதபடியும் காலத்தை வீண்போக்காதபடியும் நாம் இரத்தத்தைச் சுத்தி செய்து தேகத்தைப் பாதுகாத்துக்கொள்ள நம்முன்னேர்கள்

நமக்கு விலையற்ற ஒப்பற்ற ஒருபொருளைக் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். அப்பொருள் தமிழரைத்தவிர மற்றெந்த சாதியாருக்கும் கிட்டாதது. தமிழர்தான் முதன்முதல் அதன் குணத்தைக் கண்டுபிடித்து உலகமெங்கும் பிரசுரம் செய்தவர்கள். தமிழ் நாட்டின்பேரில் முதன்முதல் படையெடுத்து வந்த பேயர், பைசாசர், இராக்கதர்களும் (Negroes) இரண்டாவது படையெடுத்து வந்த அரக்கர், சூரர், பதுமர்களும் (Mangolians) ; மூன்றாவது படையெடுத்துவந்த பிராமணர், க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களும் (Aryans) அப்பொருளின் தன்மையை உணர்ந்து தமிழர்களின் சமயத்தைக் கைக்கொண்டு அப்பொருளைத்தரித்து மேன்மை பெற்றார்கள்.

அன்னணம் யாவராலும் போற்றப்படும்பொருள் யாதென அறிய நீங்கள் மிகவும் ஆவலுடையவர்களா யிருப்பீர்கள். அது தான் உருத்திராக்கம்.

உருத்திராக்கத்தைக் குறித்த இடங்களில் தரித்துக்கொண்டால் இரத்தம் சுத்தமாய்விடும். தேகம் நிலைத்திருக்கும். முத்திக்கு வழிதேட தேகம் நமக்குச் சாதனமாயிருக்கும்; உருத்திராக்கத்தினுடைய தன்மையானது மிகவும் ஆச்சரியகரமானது.

உயிர்ச்சாரசத்தியே ஒருருவாய்த்திரண்டது, உடலுக்கு உறுதியைப்பயப்பது ; அதனாற்றான் அதற்கு அப்பெயர் அமைந்தது. எல்லா நூல்களையும் படித்து அறிந்துக்கொள்ளச் சக்தியற்ற ஒருவனையும், படித்து அறிந்த ஒருவன் அடையும் பலனையே அடையும்படி செய்விப்பது. இவ்வுருத்திராக்கத்தின் அருமையான குணங்களையும் அதனால் மனிதர் எய்தும்பயன்களையும் இந்நூலை வாசிப்போர்க்கு இனிதுவிளங்கும். இப்பேர்ப்பட்ட மகிமைவாய்ந்த உருத்திராக்கத்தினை நாம் தரித்துக்கொள்ள வேண்டாமா? அதனுடைய குணத்தைத் தெரிந்துகொண்டால் அவசியம் தரித்துக் கொள்ளவேண்டுமென்று ஒவ்வொருவருக்கும் தோற்றுகிற்கும்.

ஆகையால், இனிமேல் உருத்திராக்கத்தின் உற்பத்தி, வகை குணம் முதலியனவற்றைக் குறித்து ஆராய்வோம்.

# இரண்டாம் இயல்.

## உற்பத்தி.

புராணங்களில் என்ன கூறப்பட்டிருக்கின்றது என்பதை முதலில் கவனிப்பாம்:—

முற்காலத்திலே தாருக வனத்தில் அரசு செலுத்திக்கொண்டிருந்த தாருகன் என்னும் அசுரன் எந்தையாகிய கந்தவேளால் திருப்போரூர் (சமரபுரி) என்னும் இடத்தில் கொல்லப்பட்ட பின்பு, அவன் புத்திரர்களாகிய உடுக்கண்ணன் (தாரகாக்ஷன்), மரைக்கண்ணன், (கமலாக்ஷன்), விஞ்சைமாலன் (வித்துன்மாலி) என்ற மூவசுரர்களும் வரபலத்தினல் முறையே பொன் மதில், வெள்ளி மதில், இரும்பு மதில் என்னும் மூன்று நகரங்களைப்பெற்று சிவபத்தியுடையவராய் * விபூதி ருத்திராக்க தாரணர்களாய் சிவபூசையாதியன செய்தும், தேவர்கள் யாவரும் தமது தந்தையைக் கொல்லுவித்தாராகலின் பழிக்குப்பழி வாங்க நினைந்து வருத்துவாராயினர். அத்துன்பங்களையெல்லாம் சகியாத விஷ்ணு, பிரமன் முதலிய தேவர்கள் யாவரும் சென்று சிவபெருமானது திருச்சந்நிதானத்தை யடைந்து முறையிட்டுப்புலம்பினர்.

அதனைத் திருச்செவியாற் கேட்ட அளவிலே பரமநாதனுகிய ஸ்ரீகண்ட பரமசிவன் அடைக்கலம் புகுந்த தேவர்களை நீக்காது காத்தலும், தம்மீது அன்புடையவராய்ப் பூசையாதியன செய்தொழுகும் அசுரரை ஒறுக்காது காத்தலும் முறைமையாகலின் மௌனங்கொண்டவராய், தேவர்களின் பெருந்துன்பத்தைத் தமது

---

* வேண்டிய பொருளெலாம் வேண்டியாங்குறக்
காண்டகு நீறுடற்புனைந்து கண்டிகை
பூண்டிலிங் கர்ச்சனை புரிமினென்றனன்
எண்டரு மயனெனு மிணையில் சூழ்ச்சியான்.

திருக்கூவப் புராணம்.

திருவுளத்தடைத்து இரக்கமுற்று, அவர்களுடைய துன்பம் நீங்கும் எல்லையைநோக்கி ஆயிரம் தேவவருடம் வரையிலும் தமது மூன்று திருக்கண்களையும் மலர்த்திக்கொண்டிருப்ப அவைகளினின்றும் நீர் பொழிந்தன.

சூரியவடிவாகிய வலக்கண் பொழிந்த நீரிலே பன்னிரண்டு உருத்திராக்க மரங்களும், சந்திர வடிவாகிய இடக்கண் பொழிந்த நீரிலே பதினறு உருத்திராக்க மரங்களும், அக்கினிவடிவாகிய நெற்றிக்கண் பொழிந்த நீரிலே பத்து உருத்திராக்க மரங்களும் உதித்தன.

வலக்கண்ணிலிருந்து உண்டான மரங்களினின்றும் கபில நிறமும், செந்நிறமும், பொன்னிறமுமான உருத்திராக்கங்களும், இடக் கண்ணிலிருந்து உண்டான மரங்களினின்று வெண்ணிற உருத்திராக்கங்களும், நெற்றிக்கண்ணில் உண்டான மரங்களினின்று கருநிற உருத்திராக்கங்களும் தோன்றின.

அவைகளுள் ஒவ்வொன்றையும் சத்தி, விஷ்ணு, பிரமன், சத்த மாதர்கள், அட்ட வித்தியேசுரர், திக்குப்பாலகர், ஏகாதச ருத்திரர், வாசுதேவர், முதலிய பன்னிருவர், சதருத்திரர், அட்ட வசுக்கள், அசுவினி தேவர்கள், துவாதசாதித்தர்கள், ஆதிசேடன், முனிவர் முதலிய கணங்கள் யாவரும் பிரீதியாகக்கேட்டுச் சிவபெருமான் ஆஞ்ஞைப்படி தரித்துக்கொண்டனர்.

என்பது புராண முதலியனவற்றின் வரலாறு.*

---

* முப்புரத்தவர் முருக்கலின் முரிந்திரிந் தமரர்
செப்புதற்கரியதாகிய தவஞ் செயச் சென்றங்
கப்பதத்திமையாது நாம் நோக்கினமாக
மைப்பெருங்கணுய் முக்கணும் வார்புனறுளித்த

பேரூர்ப் புராணம்.

திரிபுர ரெனும் பெயர் திருந்த சுரராலே
அரியயன் முதற்சுரர் அழிந்து துயரெய்தி
வரியுழுவை யுரிபுனையும் வானவனைநோக்கி
உரியதவ மாவருட மாயிர முறைந்தார்.

இவ்வரலாற்றினை அனுசரித்து ருத்திரன் என்னும் பதத்திற்கு சமஸ்கிருத லிங்காப்பட்டீயத்தில் 10—34 சுலோகங்களில் 5-வித அர்த்தங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு.

(1) துக்கத்தைச் செய்கிறவன்.
(2) ,, போக்குகிறவன்.
(3) கற்பாந்தரத்தில் "ருத்" சப்தத்தை உச்சரிக்கிறவன்.
(4) தானே அழுகிறவன்.
(5) வியாபித்திருக்கிறவன், வஸ்துக்களில் மறைந்திருக்கிறவன்.

* அக்கம் என்னும் பதத்தை அக்ஷமாகத் திரித்துக்கண் என்றும் அர்த்தம் செய்திருக்கிறார்கள்.

---

வன்றிரிபுராதிபர் செய்வாதை தனைநோக்கி
அன்றுவிடை மேலரனும ம்பிகையும் வந்து
வன்றிறல் முராரியயன் வானவரை நோக்க
மென்றுளிகண் முக்கணினும் வீழ்ந்தவெமர் வாழ.

விருத்தாசலப் புராணம்.

திரிபுரரொனும் பேரவுணராற் சிதைந்து சிந்திய மான்முதற்றேவர்
புரிதருதவ மோராயிரம்வருடம் புரிந்திட வியந்துபோய்ப் புராரி
பரிதி தென்றிரங்கிக் கண்ணிமையாது பார்ப்ப முக்கண்ணினுமமைந்த
விரிதுளி தாழ்ந்து கண்டிகைமரமா யெழுந்தது விழுந்தவொண் புவியில்

கடம்பவன புராணம்.

திரிபுர வதார்த்தமகம் நிமீலிதாக்ஷோபவம் ஸ்தேப்யோ
ஜலபிந்தவொ பூமௌ பதிதாஸ்தே ருத்ராக்ஷாஜாதாஸ்
ஸர்வாநுக்ரஹார்த்தாய தேஷாம்.

உருத்திராக்ஷ ஜாபால உபநிடதம்.

(விரிவஞ்சி நிறுத்தினும்)

* க்க – க்ஷ ஆகும் என்னும் இலக்கணப்படி,

தமிழிலிருந்து ஆரியம் பிரியும்பொழுது இலக்கணக்காரர்கள் சில விதிகளை விதித்துக்கொண்டார்கள். அவையாவன :—

ஆகையால் சமஸ்கிருத பாஷையின்படி உருத்திராக்கம் என்னும் பதத்திற்கு

(1) உருத்திரனுடைய கண் or

(2) ஷை கண்போன்ற மணி or

(3) ஷை கண்ணிலிருந்து உண்டான மணி

என்று மூன்றுவிதமாகவும் அர்த்தம் செய்திருப்பதாகக் கொள்ளக் கிடக்கின்றது.

உருத்திரனுடைய கண்ணிலிருந்து உண்டாய மணி என்பது தான் ஆரியர்களுடையவும் ஆரியாசாரத்தைத் தழுவினர்களுடையவும் கருத்து என்று புராணவரலாற்றால் கொள்ளக் கிடக்கின்றது.

உருத்திரன் என்று பொதுப்படக் கூறியதால் எந்த உருத்திரன் என்று ஒருஆசங்கை நிகழக்கூடும். அதற்கு,

(1) ஏகாதச ருத்திரர் அல்ல.

(2) 108 ருத்திரர் அல்ல.

(3) புவனபதிகளான உருத்திரர் அல்ல.

(4) சாலோக, சாமீப, சாரூபமுற்ற ருத்திரர் அல்ல.

(5) பிரம விஷ்ணுக்களோடு குணதத்துவத்தில் இருந்து அழித்தற்றொழில் செய்யும் குணருத்திரர் அல்ல.

---

| | | தமிழ் | ஆரியம் |
|---|---|---|---|
| க்க – க்ஷ | வாகத்திரியும் என்றும் உதாரணம் | பக்கம் | பக்ஷம் |
| | | தீக்கை | தீக்ஷை |
| த்த – ஸ்த | ஷை ஷை | மத்தகம் | மஸ்தகம் |
| | | புத்தகம் | புஸ்தகம் |
| ட்ட – ஷ்ட | ஷை ஷை | சட்டி | சஷ்டி |
| | | கட்டம் | கஷ்டம் |

விரிக்கிற் பெருகும். ட்ட வானது ஷ்ட வாகுமே யொழிய ஸ்ட வானது ட்ட ஆகாது என்றும் மற்றவைகளும் அவ்வாறே யென்றும் காலஞ்சென்ற கார்த்திகேய முதலியார் தமது மொழிநூலில் கூறியிருக்கும் இலக்கணத்தைக் கவனிக்க.

இதேமாதிரி கன்னடபாஷை பிரியும்பொழுது

பாலு – ஆலு ; பணம் – அணம், அண என்று வார்த்தைகளைத் திரித்துக்கொண்டு இருப்பதையும் மற்றபாஷைகளும் இவ்வாறே திரித்துக்கொண் டிருப்பதையும் பிரித்துக்காட்டலாம்.

(6) பசுவர்க்கத்திற் பிரளயாகலரிற் பக்குவப்பட்ட ஸ்ரீ கண்ட உருத்திரர் அல்ல.

(7) ஆனால் சுத்தமாயா புவனாந்தம் சங்கரிக்கும் பிரவிருத் தன் என்னும் பெயருடைய மகா உருத்திரர் என்று கொள்ள வேண்டும் என்று சைவபூஷணச் சந்திரி கையில் ஸ்ரீலஸ்ரீ. நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள் கூறுகின்றார்.

இதுவரை சமஸ்கிருத நூல்களிலும் சமஸ்கிருத நூல்களை ஒட்டி எழுதிய தமிழ் நூற்களிலும் சொன்னபிரகாரம் நாம் ஒத் துக்கொள்வோமானால் அடியில்கண்ட ஆசங்கைகள் நிகழுகின்றன.

(1) "உருத்திரன் விழித்துளிகளே யுருத்திராக்கம்" என்னும் விருத்தாசலப்புராணப்படி உருத்திராக்க விருக்ஷங்கள் உருத்திர னுடைய கண்களிலிருந்து உண்டானவையே என்று கொண்டால் திருக்கூவப் புராணப்படி திரிப்புர தகனத்திற்கு முந்தியே அதா வது தேவர்கள் உருத்திரனிடம் செல்வதற்கு முந்தியே திரிபுராதி கள் விபூதி உருத்திராக்க தாரணர்கள் என்று ஏற்படுகிறது. அப்படி யானால் திரிபுராதிகள் தரித்திருந்த உருத்திராக்கங்களுக்கு உற் பத்தி எப்படி? அவர்கள் தரித்த உருத்திராக்கங்களும் உருத்திர னுடைய கண்ணிலிருந்து உண்டான உருத்திராக்கங்களும் வேறா? வேறாயிருக்கிறதென்றால் எங்கே கூறப்பட்டிருக்கிறது?

(2) தேவர்க ளெல்லாம் மகாருத்திரனிடத்து முறையிட்டுக் கொள்ள அவர் என்செய்வதென்று ஆயிரம் தேவவருடம் ஒன்றும் தெரியாமல் விழித்தது விழித்தபடியே இருந்தார் என்று கூறினால் மகா ருத்திரனுக்கு அறியாமையைக் கற்பிக்கின்றதாகின்றது.

(3) உருத்திரன் கண்துளிகளிலிருந்து மரங்கள் உண்டாயின என்று கூறி இருப்பதைநோக்க "தேக அழுக்கைத் திரட்டிப்போடத் தென்னமர மாயிற்று" என்று சொல்லும் பாட்டிகதை போலா கிறது. கண்துளியின் குணம் என்ன? வாதநூல் (Chemical

Science) பிரகாரம் கண்துளியில் என்னென்ன சேர்ந்திருக்கிறது? கண்துளிக்கு உற்பத்திசெய்யும் குணமா? நாசம்செய்யும் குணமா?

(4) கருத்த ஆவின்பால் கருப்பாகவும் சிவத்த ஆவின்பால் சிவப்பாகவும் இருக்கக்கண்டிலேம். அதுபோல வெண்ணிலாவாகிய இடக்கண்ணில் உண்டான உருத்திராக்கம் வெண்மையென்றும், பொன்னிறச் சூரியனுடைய கண்ணாகிய வலக்கண்ணிலிருந்து உண்டான உருத்திராக்கம் பொன்னிறமென்றும் கூறினது என்னையோ?

(5) திரிபுரர்களாலே ஒறுக்கப்பட்ட வானவர்கள் புராரியிடம் முறையிட அப்புராரியானவர் அவ்வானவர்களை நோக்க மென்றுளிகள் முக்கண்ணிலிருந்தும் வீழ்ந்த என்ற வாக்கியப்படி உருத்திரனுக்கு மயக்கம் ஏற்பட்டதாகத்தெரிகிறது. மயக்கத்தால் உண்டாய கண்துளியினின்றும் உண்டான உருத்திராக்கங்கள் மயக்கத்தைக்கொடுக்குமே யல்லது விளக்கத்தைக் கொடுக்கும் என்பது எங்ஙனம்?

(6) மனிதனுடைய கண்துளிகள் போலல்ல, உருத்திரனுடைய துளியின் சக்திவேறு என்றுகூறுவரோஎனில் உருத்திரன் ஏக்கமுற்றார் என்று கேள்விப்படுதலாலும் ஏக்கமுறுதல் பசுவர்க்கத்தின் குணமானதாலும் அவரும் பசுவர்க்கத்தினர் ஆகின்றனர் அன்றோ? ஆகையினால் அந்த உருத்திரனுடைய கண்துளிகள் மனிதனுடைய துளிகள்போன்றதே யென்று கொள்ளக்கிடக்கிறதல்லவா?

(7) திரிபுராதிகளுடைய நாசத்தின் பொருட்டு உருத்திரன் தன்னுடைய இச்சாமாத்திரையில் கண்துளிகளிலிருந்து உருத்திராக்க விருக்ஷங்களை உற்பத்திசெய்தார் என்று கூறவந்தால் உருத்திராக்கத்தினால் திரிபுராதிகளுக்கு கெடுதல் நேரிட்டதாக யாண்டும் கேட்கப்படாமையால் அது கூடாது.

(8) "ஈரம்புகண்டிலேம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரமுந்தீபற
ஒன்றும் பெருமிகையுந்தீபற"

என்ற திருவாசகத்தின்படி ஒருவித ஆயுதமுமில்லாமல் பிறரொருவருடைய உதவியும் இல்லாமல் புன்சிரிப்புடன் முப்புரத்தையும் ஒருங்கே தீக்கொளுத்த வல்லமைவாய்ந்த உருத்திரனுர் தேவர்களுடன்தாமும் கண்ணீர்விட்டழுதார், அதனுல் உருத்திராக்க விருக்ஷங்கள் உண்டாயின என்று கூறுவது பொருத்தமுடைத்தோ ?

(9) "அப்பணிசெஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரமெய்தமை யாரறிவாரே"

என்னும் திருமந்திரத்தின் கருத்து அதுவேயோ ?

இவைகளையெல்லாம் கூர்ந்துநோக்குமிடத்து வியாசர் செய்த 18புராணங்களும் அவைகளின் வழித்தாகிய ஏனைய புராணங்களும் கட்டுரைகளை மிகுதியும் கொண்டிருக்கின்றன என்பது போதரும்.

இப்புராணங்களெல்லாம் எப்போது எழுதப்பட்டன வென்ருல் ஆரியர் தென்னுடுசேர்ந்து தமிழர்களுடன் கலந்து உறவாடி இருவரும் இருவர் பாஷைகளைக் கற்றுக்கொண்டு நூல்கள்செய்யப் புகுந்தகாலம். தமிழ்ப்பதங்களை யெல்லாம் ஆரியபாஷையில் எழுத முயன்றுவந்தகாலம். தமிழில் ஆரியங்கலந்து எழுதுவது தான் அக்காலத்துக்கு ஒரு பேரழகு. இக்காலத்தில் ஆங்கிலம் கலப்பதுபோல. இதற்கு மணிப்பிரவாளம் என்னும் நடையில் எழுதப்பட்ட ஜைன நூல்களும் வைணவ நூல்களின் வியாக்கினங்களுமே சான்று பகரும்.

ஆகையால் ஆரியர்காலத்திலும் அவருக்குப் பிற்காலத்திலும் ஆரியங்கற்ற தமிழ் ஆரியர்கள் த்த வரும்போது ஸ்த என்றும், ட்ட வரும்போது ஷ்ட என்றும், க்க வரும்போது க்ஷ என்றும் திரித்தே எழுதிவந்தார்கள்.

சிலசமயங்களில் உச்சரிப்பைக் கவனித்தார்களே யொழிய பொருளைக் கவனிக்கவில்லை.

இக்காலத்திலும் சமஸ்கிருதத்தில் பேசவேண்டும் என்று சிலர் ஆரம்பித்து வேட்டி என்பதற்கு வேஷ்டி என்று கற்றுக் கொண்டவுடனே தமக்கு எல்லாசப்தங்களும் வந்ததாக எண்ணி "வேஷ்டியை எடுத்துக்கொண்டு வீஷ்டுக்குப்போய் மாஷ்டைப் பிடித்துக் கோஷ்டத்தில் கஷ்டு" என்று பேச ஆரம்பிக்கிறார்கள்.

தற்காலத்தில் புதிதாக வைஷ்ணவ மதத்தை யனுசரித்து வைணவ சம்பிரதாயங்களைக் கற்றுக்கொள்ளுகிறவர்கள் எங்கே தங்களைப் புது வைணவன் என்று சொல்லிவிடுகிறார்களோ என்று பயந்து எல்லா வார்த்தைகளுக்கும் முதலில் "திரு" என்ற வார்த்தையையும் எல்லாப் பதார்த்தங்களுக்கும் கடையில் "அமுது" என்றபதத்தையும் சேர்த்துப்பேசுவதுடன் வியங்கோள் வினைமுற்றினால் முடிப்பதை யாவரும் அறிவார்கள்.

இன்னும் இக்காலத்தில் ஆரியாசாரத்தை மேற்கொண்ட பிராமணர்கள் தமிழ்ப் பேசுங்காலத்தில்

| | | | |
|---|---|---|---|
| (1) குன்றமெரிந்தான் | என்பதற்கு | குன்னமெரிந்தான் | என்றும் |
| (2) அன்று, அல்ல | ,, | அன்னு | ,, |
| (3) அவர்கள் இவர்கள் | ,, | அவாள் இவாள், அவா இவா | |
| (4) இலக்ஷிமி | ,, | எச்சு | ,, |
| (5) நரசிம்மன் | ,, | நச்சு | ,, |
| (6) கனகவல்லி | ,, | கக்கா | ,, |
| (7) சேஷாத்திரி | ,, | சேச்சு | ,, |
| (8) உருக்குமணி | ,, | ருக்கு | ,, |
| (9) தம்பி | ,, | அம்பி | ,, |
| (10) தங்கச்சி | ,, | அக்கச்சி | ,, |
| (11) அகம் | ,, | ஆம் | ,, |

(விரிக்கிற் பெருகும்.)

---

வியங்கோள்வினை முற்றாவது:— வர, போக, பேச, எழ, சாதிக்க, சாய்க்க எனவரு வனவாம்.

திரித்தும் குறுக்கியும் வழங்குவதை நாம் கண்கூடாப்பார்க்க வில்லையா? மேற்காட்டிய திரித்த சொற்களில் ஏதாவது பொருளுண்டாவென்று நீங்களே கவனியுங்கள். உச்சரிப்பையும் படாடோபத்தையும் மாத்திரம் கவனிப்பது ஆரியாசாரம் என்று விளங்கவில்லையா? மேற்காட்டிய பிரகாரம் பேசாவிட்டால் பிராமண வாக்கு அல்லவென்றும் அப்படித்தான் பேசவேண்டுமென்றும் பிராமணர்கள் வற்புறுத்துவதை நீங்கள் கேட்கவில்லையா?

சென்னையில் Hamilton Bridge என்றிருந்த பதமானது Hampton Bridge ஆகிப் பிறகு அம்பட்டன் பாலமாகி இப்போது Barber's Bridge ஆயிருப்பதையார்தான் அறியார்? இதற்கு இலக்கணம்கூற யாரால்முடியும். இனிக்கொஞ்ச நாட்கழித்து அப்பாலத்தின் அருகாமையில் ஒரு கோயில் ஏற்பட்டு அதற்குப் புராணம் ஏற்படும்போது அந்த வாராவதியானது ஒரு [நாவிதனால்] கட்டப்பட்டது என்று கதை யெழுதுவாரன்றோ?

அதுபோலவே அக்காலத்தில் அக்கம் என்ற பதத்தை அக்ஷம் என எழுதும் வழக்கப்படி எழுதிவிட்டார்கள். அக்கம் என்னும் பதத்திற்கும் அக்ஷம் என்னும் பதத்திற்கும் பொருள்வேறு என்று இனிப்பின்னுல் கூறப்படும் விஷயங்களால் அறிவீர்கள். அப்படியிருந்தும் பொருளைக்கவனியாமல் ஆரியத்தில் அக்ஷம் என்றபதத்திற்கு கண் என்ற அர்த்தம் ஆகையால் வார்த்தையைக்கொண்டு கதை கட்டிவிட்டார்கள்.

உருத்திராக்கம் என்பது சிறந்த தமிழ்ப்பதம். ஆழ்ந்தபொருளைத் தன்னிடத்துக்கொண்டது. அதை அப்படியே உச்சரிப்பதை விட்டு அழகை அலங்கோலம் செய்வதையொப்ப விகாரப்படுத்தி ருத்திர அக்ஷம் என வழங்கல் என்னவிபரீதம்.

விராட்புருடனுடைய முகம், குய்யம், துடை, பாதம் இவைகளை பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர சாதிகளுக்குப் பிறப்பிடமாகவும் அக்கினியை வன்னியர்களுக்குப் பிறப்பிடமாகவும், பிரமாவின் கபாலத்தைக் குலாலர்களுக்கு பிறப்பிடமாகவும், பூமியையும்

கங்கையையும் வேளாளர்களுக்குப் பிறப்பிடமாகவும், சதாசிவ மூர்த்தியின் பஞ்சமுகங்களைக் கோவில் பூசைசெய்யும் ஆதிசைவப் பிராமணர்களுக்குப் பிறப்பிடமாகவும் கற்பித்ததுபோல உருத்திராக்கத்திற்கு உருத்திரனுடைய கண்ணைப் பிறப்பிடமாக்கினார்கள்.

ஆரியர்களுடைய கட்டுரைப்புராணங்களில் நாளதுவரை எல்லோரும் நம்பிக்கை வைத்திருந்தார்கள். இப்போழ்து ஆங்கிலப் படிப்பும் அதன் மூலமாகத் தமிழ்நூல்களின் ஆராய்ச்சியும் ஏற ஏற மேற்கண்ட ஆரியநூல்களில் சந்தேகம் உண்டாகிறது.

ஆரியக்கவிகள் அவர்களுடைய இலக்ஷணப்படி (Allegorical) கதைகளாகவும் (பஞ்சதந்திரம்போல) எழுதியிருக்கலாம். அவைகளைத்தமிழர் சரிவர உய்த்துணராமல் உண்மையென நம்பி மருண்டனர் போலும்.

திருவெறும்பியூர் என்னும் ஸ்தலத்தைப்பற்றி பலரும் அறிவர். எறும்பு என்றால் மலை என்று அர்த்தமாகும். அதாவது மலையுள்ள ஊர் என்று அர்த்தமாகும். அதைவிட்டு எறும்புகள் பூசைசெய்து பேறுபெற்ற ஸ்தலம் என்று பிற்காலத்துக் கவியொருவர் புராணம் செய்திருக்கிறார். இது வார்த்தையைக்கொண்டு கதை எழுதினதாக ஏற்படுகிறதல்லவா ?

உருவகமாகவும் புனைந்துரைகளாகவும் கதை யெழுதுவது கவிராயர்களுக்கு இயற்கையே. அதைப்பிரித்துத் தெரிந்து கொள்ளுவது மாணவர்களுக்கு ஓர் உயர்ந்த குணமே. அதுதான் இக் காலத்தில் வேண்டப்படுவது.

இனி உண்மை இற்றென விசாரிப்போம். நமக்குத் தமிழ் நூல்கள் எல்லாம் கிடையாததினால் இருக்கிறவைகளைக்கொண்டு கரையேற வேண்டியிருக்கிறது. முதல்முதல் உருத்திராக்கம் என்னும் வார்த்தையைக்குறித்து ஆராய்வோம்.

உருத்திராக்கம் என்னும் பதமானது உரு + திரம் + ஆக்கம் என்னும் மூன்றுவார்த்தைகளால் அமைந்த ஒரு பதம்.

உரு - உடல், அட்டை, உருத்தலைச் செய்யென்னேவல், உள், கலை, கோபம், சன்னதம், செபத்தினுரு, நிறம், நோய், பரக்கலம், வடிவு, வேற்றுமைக்குறி முதலிய எண் வகை இடைச்சொற்குறி, முளை, தோன்று.

திரம் - உறுதி, திராசி, நிலை, பெலன்

ஆக்கம் - ஆகுதல், இலக்குமி, இலாபம், எழுச்சி, கொடிப் படை, செல்வம், படைவகுப்பு, பொன்

என்று ஒவ்வொரு பதத்திற்கும் அநேக உரைகள் உள.

உரு, திரம் என்ற இந்த இரண்டுபதங்களும் **ஆக்கம்** என்னும் பதத்திற்கு அடைமொழிகள்.

மேற்காட்டிய மூன்று பதங்களிலும் முக்கியபதம் ஆக்கம் என்பதே.

ஆக்கம் என்னும் பதத்திற்கு அட்டவித உரைகள்உள. (அட்டலக்குமி யென்ப) அவ்வெண்வித ஆக்கங்களையும் ஒருங்கே அளிக்கும் ஆற்றல் வாய்ந்த மணியாதலால் அம்மணிக்கு ஆக்கம் எனப் பெயர் வந்தது. ஆக்கத்தைக் கொடுப்பது **ஆக்கம்** or அக்கம். விளக்கத்தைக்கொடுப்பது விளக்கம் (விளக்கு) என்பதுபோல.

ஆக்கத்தை எதற்கு? எப்பொழுது? அளிக்கும் என கேள்வி உண்டாகலாம். அக்கேள்விக்கு விடை அதன் அடைமொழிகளாலேயே அறிகிறோம்.

உரு - உடல்

திரம் - உறுதி,

உடலுக்குத்திரமாய் எப்பொழுதும் ஆக்கத்தைக் கொடுப்பது உருத்திராக்கம் என அறிகிறோம்.

ஆக்கம் என்னும் பதத்தைப் பெரியோர்கள் எந்தெந்தப் பொருள்களில் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள் என்று சிறிது **விசாரிப்பாம்** :—

(ஆக்கம் - சிவனது நாமம்.)

" காக்குநின்னருட் காட்சியல்லா-லொரு
போக்குமில்லையென் புந்திக்கிலேசத்தை
நீக்கியாளுகை நின்பரமன்பினர்
ஆக்கமே முக்கணனந்தமூர்த்தியே "

(தாயுமானவர்—250)

(ஆக்கம் - இன்பத்திற்குக் காரணமானவஸ்து.)

" தேக்கியின்பம் திளைக்கத்திளைக்கவே
ஆக்கமா யெனக்கானந்தமாகியே
போக்கினோடு வரவற்றபூரணம்
தாக்கிநின்றவா தன்மயமாமதே

(தாயுமானவர்—221)

(ஆக்கம் - மேலெய்தக்கடவும் ஊதியம்)

" ஆக்கங்கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்காரறிவுடையார் "

(ஆக்கம் - கைப்பொருள்.)

" ஆக்கமிழந்தே மென்றல்லா வாருக்கம்
ஒருவந்தங்கைத் துடையார்"

(ஆக்கம் - பொருள்)

" ஆக்கமதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கமுடையான் உழை "

(ஆக்கம் - வாழ்வு, நன்மை.)

" ஆக்கமுங்கேடும் அதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு "

(திருக்குறள்.)

ஆகையால் இதுகாறும் கூறியவாற்றால் தெரிந்துகொண்டது என்னவென்றால் உருத்திராக்கம் என்னும் பெயர் சிறந்த தமிழ்ப்

பெயரென்றும், வடமொழிப்பதம் அல்லவென்றும், அதற்கு உருத்திரனுடைய கண்ணிலிருந்து உண்டானமணிஎன்று அர்த்தமாகாது என்றும், புராணங்களிற் கூறுபவைகளெல்லாம் வெற்றுரைகளாம் என்றும் தெரிந்துகொண்டோம்.

இத்தகைச் சிறப்புவாய்ந்த உருத்திராக்கமானது இமயமலையில் உண்டாவது மற்ற இடங்களில் உண்டாகிறதில்லை.

தேக்கு, சந்தனம், மிளகு, மயிலிறகு எப்படித்தென்னாடாகிய தமிழ்நாட்டிற்கே உரித்தோ,

ஓக் முதலிய மரங்கள் எப்படி ஐரோப்பிய நாடுகளுக்கு மாத்திரம் உரித்தோ,

அப்படி உருத்திராக்கமானது இமயமலையாகிய நேபாளதேசத்திற்கு உரித்து.

ஒரு முகமணிமுதல் பதினாறு முகமணிவரையுமுள்ள பெருமணிகள் விளையக்கூடிய அனேகவித உருத்திராக்க மரங்கள் அங்கே பயிராகின்றன.

"முள் மணிகள் காய்க்குமரம் முப்பதுடனெட்டே" என்ற புராண வாக்கியப்படி 38-விதமானவைகள் இருக்கின்றனவென்று பெரியோர் கூறுகின்றார்கள்.

பத்திராக்கங்களை (இலந்தை, பதிரி) ச்சிலர் உருத்திராக்கங்களென மருண்டு தரிப்பர்.

வித்தியாசம் என்னவென்றால்,

(1) உருத்திராக்கங்களுக்கு முகங்கள் இயற்கை.
பத்திராக்கங்களுக்கு ,, செயற்கை.

(2) நன்றாய்விளைந்த உருத்திராக்கம் பொன்மாத்துடையது.
,, பத்திராக்கம் ,, இல்லாதது.

நான் 1914-ம் வருடம் வடநாடு (காசிமுதலிய இடங்கள்) சென்றிருந்தபொழுது உருத்திராக்கங்களைப்பற்றி அவ்விடத்திலு

ள்ள வியாபாரிகளேயும் சாஸ்திரிகளேயும் உசாவினேன். வெண்மைமுதலிய நால்வகை நிறங்கள் உண்டாவெனக்கேட்டேன். துளே செயற்கையோ இயற்கையோ எனக்கேட்டேன்.

அவர்கள் உருத்திராக்கங்களுக்கு முகங்கள் இயற்கை யென்றும் துளே செய்ற்கையென்றும் சொன்னூர்கள்.

இன்னும், உருத்திராக்கங்கள் மரங்களினின்றும் பறிக்கும் பொழுது வெண்ணிறமாகவே இருக்கின்றன வென்றும், பறித்த பிற்பாடு வியாபாரிகள் கடுகு எண்ணெயில் நனேப்பதால் மற்ற மூன்றுவித நிறங்களேயும் அடைகின்றன வென்றும் கூறினூர்கள்.

ஆனல் நன்ருய் முதிராத உருத்திராக்கங்கள் கருநிறத்தையும் பொன்னிறத்தையும் அடையாது வெண்மை, செம்மையாகவே நின்றுவிடும் என்றும் கூறினூர்கள்.

இவர்கள் கூற்று எவ்வளவுதூரம் வலியுடைத்து என்பதை நேபாளத்திலேயே நேராய்ப்பறிக்கும்போது பார்த்தவர்கள் சீர்தூக்கி ஆராய்ந்தால் நலம்.

## மூன்றாம் இயல்.

## உருத்திராக்க வகையும், பெயரும், காரணமும்.

### (a) வகை.

தற்காலத்தில் நேபாளதேசத்தில் எத்தனைவித உருத்திராக்க மரங்கள் வளர்கின்றன என்று அத்தேசத்துத் தாவரநூல் வல்லுநர் வெளிப் படுத்துகிறவரையிலும் நாம் புராணங்களிற் சொன்ன வகைகளையே ஒப்புக்கொள்ள வேண்டியது.

பேரூர்ப்புராணத்தில் உருத்திராக்க மரங்கள் 36 வகையென்றும் உருத்திராக்க மணிகள் நால்வகை நிறங்களையுடையவை என்றும் கச்சியப்பமுனிவர் கூறுகின்றனர்.

விருத்தாசலப்புராணத்தில் உருத்திராக்கமரங்கள் 24 பேதங்களுடையன வென்றும் 38 விதங்க ளுடையனவென்றும் உருத்திராக்கமணிகள் வெண்மை, பொன்மை, செம்மை, கருமை என நால்வகை நிறங்களை யுடையனவென்றும் கூறப்பட்டிருக்கிறது.

கடம்பவன புராணத்தில் 38 வித உருத்திராக்க விருக்கங்களையும், வெண்மை, சிவப்பு, அவ்விருநிறம் கலந்தது, கருமையென நால்வகை மணிகளையும் பற்றிப்பேசப்படுகிறது.

சைவசமய நெறி உரையில் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் வலக்கண் பொழிந்தநீரில் 12 மரங்களும், இடக்கண் பொழிந்த

---

**பேரூர்ப்புராணம்.**

வலக்கணீரிடைப் பன்னிருமரமிடப் பாற்கட்
சலத்தினேழிருமரந்தழல் விழியினீர் தோய்ந்த
நிலத்தி னையிருமரமுமாயின நிகழ்த்தியவிக்
குலத்துக் கியாவரும் கூறு பேரு ருத்திரவக்கம்.
வெண்மையுந்திகழ் பொன்மையும் வெண்மை பொன்மையுஞ்சேர்
வண்மையுங்கருமையு மெனவகுத்த நானிறத்தும்
உண்மை அக்கமாமணிகள் அவ்வுரைத்தன முறையே
தண்மை யந்தணர் முதலிய நால்வர்க்கும் சாரும்.

நீரில் 16 மரங்களும், நெற்றிக்கண் பொழிந்த நீரில் 10 மரங்களும் உண்டாயினவெனவும், வலக்கண்ணிலிருந்து கபிலநிற, சென்னிற, பொன்னிற உருத்திராக்கங்களும்; இடக்கண்ணிலிருந்து வெண்ணிற உருத்திராக்கங்களும், நெற்றிக் கண்ணிலிருந்து கருநிற உருத்திராக்கங்களும் தோன்றின எனக் கூறுகின்றனர்.

சைவபூஷணச் சந்திரிகையில், வெண்ணிறமணி, கபிலநிற மணி, சென்னிறமணி, பொன்னிறமணி, கருநிறமணியென உருத்திராக்கம் ஐந்துவகைப்படும்என்று கூறப்பட்டிருக்கிறது. அவை ஒவ்வொன்றும் ஒருமுக மணி முதல் 16 முகமணியெனப் பதினாறுவிதப்படலால் எண்பது வகை என்பர் ஸ்ரீல. ஸ்ரீ. நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்.

ஆகையால் உருத்திராக்க மரங்களின்வகையும், உருத்திராக்க மணிகளின் வகையும், புராணகாலத்திற்கூட நிச்சயிக்கப்படவில்லை என்று தெரிகிறது.

இனி ஒருமுகமுதல் பதினாறுமுகம்வரை உள்ள உருத்திராக்கங்களைப்பற்றிச் சிறிது கவனிப்பாம்.

விருத்தாசலப்புராணக்காரர் "மிக்கபதி மூன்றினுக்கு மேலுமுகமில்லை" என்பர்.

பேரூர்ப் புராணக்காரர் 14 முகம்வரை பேசுவர்.
கடம்பவன புராணக்காரர் 15 முகம்வரை கூறுவர்.
சைவபூஷணச் சந்திரிகைக்காரர் 16 முகம்வரை சொல்லுவர்.

---

**விருத்தாசலப்புராணம்.**

(1) உருத்திரன் விழித்துளிகளேயு ருத்திராக்கம்
திருத்திரவி சந்திரன் றிருந்துகனற்கண்ணி
னருத்திமிகு பேதமிரண் டாறுப்பதினறு
பொருத்தொருபான் மேனிசெம்மை பொன்தவளங்காரே.

(2) முண்மணிகள் காய்க்குமரம் முப்பதுடனெட்டே.

**கடம்பவன புராணம்.**

(3) அன்றுதொட்டு ருத்திரவக்கமென்பெயர் முப்பானெடெண்
பேதமாம் வெண்மை, யொன்றியசிவப்பவ் விருநிறங்கலத்
துரைத்திடுங் கருமை யீங்நான்கின்.

அவைகளின் வடிவும் (அதி தேவதைகளும்) பலனும் வருமாறு:—

| முகம். | வடிவு. | பலன். |
|---|---|---|
| 1 | சிவன் வடிவு (தற்பரசிவம்) | வேதியர் கொலை போக்கும். |
| 2 | சிவன்சத்தி (ஸ்ரீகண்ட பரம சிவம்) | பசுக்கொலை போக்கும். |
| 3 | அங்கி | மாதர் கொலை போக்கும். |
| 4 | நான்முகன் | நரர் கொலை போக்கும். |
| 5 | காலவங்கிப்பெயர் வரதன் | உணவின்குற்றம், பொய், புணர்ச்சி முதலிய குற்றங்கள் போக்கும். |
| 6 | ஆறுமுகன் | பகைவரை வெல்லலாம், பிரமகத்தியை நீக்கும். |
| 7 | சேடன் | பல்பசுக்கொலை, பொன்களவு, முதலிய குற்றங்களை நீக்கும். |
| 8 | எரம்பன் | குருதாரப் புணர்ச்சி, துலாபார தானமேற்றகுற்றம், பிறன்கை அன்னம் ஏற்றிடும் பிழை, பிறன் பொருள் கவர்ந்த தோஷம்முதலியனநீக்கும். |
| 9 | வயிரவன் | அராத்தீங்குகள் போக்கும், செல்வம் பயக்கும், முத்தியொடு புத்தி சித்திக்கும், கோடி மறையோர் வதைக் குற்றம் போக்கும். |
| 10 | புவியுண்டவன் (விஷ்ணு) | நாள், கோள், பூதம் ; பேய், பிசாசு, மிருகம், பிரமராக்ஷசு முதலியவைகளால் ஏற்படும் துன்பம் நீங்கும். |
| 11 | ஏகாதச ருத்திரர் | ஆயிரம் அஸ்வமேத யாகபலன், 1,000 கோமேதயாகபலன் கொடுக்கும். |
| 12 | பன்னிரு சூரியர் | பரிமேதம், மேரு தானம் முதலிய பலனைக் கொடுக்கும். |
| 13 | கந்தன் | சிந்தைவேட்டவும், செம்பொன்னும், வீரமும் செறிக்கும்; தந்தை தாய் தனையரைத் துணைவரைக் கருவை மாய்த்தவதை மாறும். |
| 14 | சிவன் பார்வதி | துகள்நீக்கிச் சிவபுரம் அடைவிக்கும், விண்ணவர் தவர் இறைஞ்சுவர், வசியம் உண்டாம், ஊழியினும் அழிதரா உலகில் உய்க்கும். |
| 15 | பரநாதம் (சதாசிவநாயனர்) | எப்பாவமும் வீட்டும், முத்தியிற் சேர்க்கும். |
| 16 | அனந்தேசுரர் | பிரமா, விஷ்ணு, ருத்திரர்களும் முப்பத்து மூன்றுகோடி தேவர்களும் உவப்பார்கள். சிவசாயுச்சிய வாழ்வு கிடைக்கும். |

சென்னை-600 005. 142895 RUI 1418

## (b) & (c) பேயர் & காரணம்.

உருத்திராக்கத்திற்கு புராணங்களில் அடியில்வரும் பெயர்கள் படிக்கப்படுகின்றன.

(1) ஆக்கம், அக்கம், அக்கு

(2) மணி, அக்கமணி, கண்மணி, கடவுண்மணி, தெய்வ மணி, இறைக்கண்.

(3) கண்டம், கண்டி, கண்டிகை.

(4) முள்மணி.

(5) நாயகமணி.

இனி இப்பெயர்கள் அமைந்த காரணத்தைப் பற்றிச்சிறிது கூறுவாம் :—

கந்தப்புராணக்காரர் உருத்திரன் என்னும் பதத்திற்கு :—
"இன்னலங்கட லுட்பட்டோர்யாரையு மெடுக்குமாற்றால்
உன்னரும்பரம மூர்த்தி உருத்திரன் எனும்பேர்பெற்றான்"

(இ - ள்.) பிறவித்துன்பம் என்னும் பெருங்கடலுள் அகப்பட்டுழலும் ஆன்மாக்களை எல்லாம் திருவருள் என்னும்தெப்பத்திலல் எடுத்து முத்திக்கரை சேர்ப்பவன்.

என்று பொருள் விரித்திருக்கின்றார். அதாவது உருவாகிய தேகத்தை யெடுத்த ஆன்மாக்களுக்கு என்றும் அழியாத திரமான பதவியைக் கொடுப்பவர் என்று அர்த்தம்.

ஆக்கம் என்பதின்கருத்து முதல் இயலிற் கூறினும்.

அக்கம் என்பது ஆக்கம் என்னும் பதத்தின் குறுக்கம்; அக்கு என்பதும் அப்படியே.

மணி = கொட்டை, அழகு, நன்மை முதலிய பல உரைகளைக் கொண்டது. உருத்திராக்கம் கொட்டையாதலால் மணியென்றுவது; அழகு, நன்மை முதலியவைகளை அளிப்பதால் மணியென்றுவது ஆயிற்று எனக்கொள்க.

அக்கமணி = ஆக்கத்தைக் கொடுக்கும் மணி.

கண்மணி = கண்போன்றமணி, சிறந்த மணி.

| | |
|---|---|
| கடவுண் மணி | =ஏனைய கொட்டைகளுக்கு இல்லாத பெருமை வாய்ந்த மணியாதலால் கடவுண் மணி. மனிதரில் கல்விகேள்விகளிற் சிறந்தவரைத் தெய்வப் பிறப்பு, அவதாரபுருஷர் என்றுசொல்வதுபோல. |
| தெய்வ மணி | =கடவுண் மணி யென்பதின் மொழிபெயர்ப்பே. |
| இறைக்கண் | =மனிதனுடைய கண்ணைப்பார்க்கிலும் இறைவனுடையக் கண் விசேஷமானதால் மிகச்சிறந்த மணி என்பது. |
| கண்டம் | =32காலாள் கொண்ட படைக்குப்பேர்; அதுபோல் 32 மணி கொண்ட மாலைக்குப் பேராயிற்று. |
| கண்டி, கண்டிகை | =கண்டம் என்னும் பதத்தின் திரிபு ; அல்லது குற்றங்களையும் துன்பங்களையும் கண்டித்தலால் அப்பெயர் பெற்றது எனலும் பொருந்தும். |
| முள்மணி | =பலாக்காயைப் போன்ற கொட்டையாதலால் முள்மணி. |
| நாயகமணி | =எல்லா மணிகளினும் குணத்தினால் சிறந்தது, தலைமை பெற்றது ஆனபடியால் நாயகமணி. (நாயகம் = தலைமை, சிறப்பு.) |

## நான்காம் இயல்.

## உருத்திராக்கத்தின் குணமும் பலனும்.

உருத்திராக்கத்தினிடத்தில் உயிர்ச்சார சக்தி நிறைந்திருக்கிறது.

*( Human Magnetism and Electricity. )*

அதைக்குறித்த இடத்தில் தரிப்பதால் தேகத்தினிடத்து அம்மணியின் சத்திபாய்ந்து இரத்தத்தைச்சுத்தி செய்து உடம்பிற்குப் பொலிவைத்தரும்.

அதனல் அனேகவியாதிகள் நீங்குகின்றன. அறிவு விளக்கம் எய்துகின்றது.

மூளையை வலுப்படுத்தி நுண்ணிய அறிவை வளரச்செய்கின்றது.

அக்கமணியை முலைப்பாலில் உரைத்துக்கொடுக்க தாகம், திரிதோஷம், விக்கல், பித்தம், இவைகள் தீரும் (வைத்திய சாரசங்கிரகம், (page 525).

உருத்திராக்கம் சூக்கும மின்சாரமுள்ளது. அதைத்தரிக்கில் மின்சாரம் சரீரத்தில் பரவி இரத்தத்தைச் சுத்திசெய்து நாடிகளுக்குப் பலமும் தரும், மூளையைத் தெளிவுபடுத்தும், மனதுக்கு உற்சாகத்தையும் நிலையையுந்தரும், தொத்துவியாதிகள் பற்றுமற்றடுக்கும் எத்தனை அதிகம் தரிக்கின்றனரோ அத்தனை மின்சாரம் அதிகரித்து இரத்த சுத்தியையும், தேகபலத்தையும், விருத்தி செய்யும் என்பது விருதை. சிவஞான யோகிகள் கூற்று.

" நீளுமதிதாகத்தை நீங்காமுத்தோடத்தை
ஆளும் விக்கல் பித்தத்தை யாற்றுங்கால்—நாளும்
இருத்திராமற்கபத்தை வீட்டுமே நல்ல
உருத்திராக்கத்தின் வலியுன் "

தேரையர்.

அதிதாகம், முத்தோஷம், விக்கல், பித்தம், கபம் இவைகள் நீங்கும் என்று தேரையர்நூலால் அறிகிறோம்.

நாவறண்டு பேசநாவெழாமல் இருக்கும் ஜன்னிதோஷ முதலிய நோய்களுக்கு உருத்திராக்கத்தை உரைத்து நாவிற்பூசினல் நாவிலுள்ள வறட்சி நீங்கி நாடிநரம்புகளில் பலமேறி நாவுக்கு உயிருண்டாய் பேச சக்தியுண்டாவது அனைவரும் அறிந்த உண்மை. இதற்குக் **கண்டாவிழ்தம்** என்றுபெயர் (கண்டம் = உருத்திராக்கம்).

தாம்பிரவர்ணமும் கெட்டியும் கனமுமானவை (நெல்லிக்காய் பருமன் உள்ளன) மிக்க சத்துள்ளன.

மின்சாரம், காந்தம் முதலிய சக்திகள்ஏற்பட்ட உலோக மோதிரம், (Magnetic ring and Electric ring), பதக்கம், (lockets) ஒட்டியாணம் (Belts) முதலியன ஆங்கிலேயர், ஜர்மானியர், அமெரிக்கர், வங்காளத்தார் முதலியவர்களால் செய்யப்பட்டும் பெரும்பாலராற்றரிக்கப்பட்டும் வருகிறதை நாம் பார்க்கவில்லையா? அவைகளிலுள்ள சத்து செயற்கை யாதலால் சிறிது காலத்திற்குள் நீங்கிப்போகும்.

உருத்திராக்கம் காந்த சக்தியையும் மின்சார சக்தியையும் இயற்கையிலேயே உடையது ஆகையால் நீங்காது நிலைத்திருக்கும்.

பல இடங்களிலும் தொத்துநோய்கள், பிள்ளைப் பிணிகள் பற்ருமல் இருக்கும்பொருட்டு பலமதத்தினரும் குழந்தைகளுக்கு ஏக ருத்திராக்கதாரணம் புரிகின்றனர். அவைகளை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம் அல்லவா.

இஃது தேரை, கக்குவான், காமாலை முதலிய நோய்களுக்கு தேரை, புங்கங்காய், அமுக்கிராங்கிழங்கு இவைகளைக் கழுத்து அல்லது புயங்களில் தனியாயும் குளிசமாடியும் தரிப்பதும் அதனுல் அந்நோய்கள் நீங்குவதும்போன்றது என்று விஸ்தாரமாய் திருவன்விருதை சிவஞான யோகிகள் கூறுகின்றூர்.

ஆதலால் நோய்வராமற்காதது இரத்தத்தைச் சுத்திகரித்து உடலுக்கு உறுதி பயந்தற் பொருட்டு எல்லாமதத்தினரும் மேற்கொள்ளத்தக்க விலையற்ற அவிழ்தங்களில் உருத்திராக்கமும் ஒன்று.

விபூதியும் அப்படியே. விபூதியை மகமதியர்கள் கிறித்துவர்கள் முதற்கொண்டு எல்லாமதத்தினரும் கையாடுவதை நாம் பார்க்கவில்லையா? ஆகையால் விபூதியும் உருத்திராக்கமும் சிலர் நினைக்கும் வண்ணம் ஒருவகுப்பினர்க்கு மாத்திரம் உரித்தன்று. சர்வஜீவ கோடிகளுக்கும் உரித்து, எல்லாரும் அவைகளின் பயனை அறிந்து அணிந்து பிழைக்குமாறு எல்லாம் வல்ல கடவுளால் மும்மலநோய்க்கு மருந்தாகச் செய்யப்பட்ட ஒப்பற்ற அவிழ்தங்கள் என்பதை ஒவ்வொருவரும் கவனிப்பார்கள்.

எண்ணில்லாத மனிதர்களும், சித்தர்களும் கற்பங்களைச் சாப்பிட்டுக் கஷ்டப்படுவதெல்லாம் தேகத்தைநோய் வராமற் காப்பாற்றிக்கொள்ளவே. இதனால்தான் "நோயற்ற வாழ்வே வாழ்வு" என்னும் பழமொழியும் எழுந்தது. இத்தகைய நோயற்ற வாழ்வானது நமக்கு உருத்திராக்கம் தரிப்பதால் எளிதில் கிடைக்கின்றது.

நோய் வராமற்போகவே சரியை, கிரியை, யோகம், முதலியன சாதிப்பதற்குத் தேகம் இடம் கொடுக்கின்றது. அதனால் ஞானத்தையும் கடையில் முத்திப் பேற்றையும் அடைவோம். இவற்றிற்கெல்லாம் காரணம் உருத்திராக்கமே.

ஒருவனுக்கு ஞானம் ஏற்பட்டால் கடவுட்டன்மையுடையவனாகின்றான், அதனாலே தான் உருத்திராக்கம் தரித்தவரைக் கண்டால் கடவுளென்றே நினைத்து வழிபடும்படி நம் நூல்களில் விதித்தது.

எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் தரிக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அதிசீக்கிரம் ஞானத்தை அடைகிறான். அதனாற்றான்

"ஆயிரந்தரித்தோர் அரனெனப்படுவர்" என்னும் பழமொழியும் எழுந்தது.

உருத்திராக்கம் தரித்து ஒருதடவை மந்திரம் உச்சரித்தால் அது கோடி தடவைக்குச்சமம் என்றும், புனல் குளிப்பின் அது கங்கைக்குச் சமானமென்றும் சொல்லியிருப்பதெல்லாம் அவ்வுருத்திராக்கத்திலுள்ள சாராம்சத்தைக் கருதியேதான்.

மணியை இகழ்ந்தோர் பஞ்சமகாபாதகர் என்று புராணங்களில் கூறியது தரித்தோர் அடையும் பயன்களை இகழ்ந்தோர் அடையாததால் பாபத்தைச் செய்தவர்களாகக் கூறினதேயொழிய வேறின்று.

உருத்திராக்கங்களைக் கம்பியினுலும் பட்டுக் கயிற்றினுலும் கோர்ப்பது வழக்கமாயிருக்கிறது. உருத்திராக்கங்களுக்கிடையில் உலோக பில்லைகளாவது, வில்வ ஓடு, சுரை ஓடு இவைகளினுற் செய்த பில்லைகளாவது போடுகிறுர்கள். பில்லைகள் கிடையாத போழ்து பட்டுக் கயிற்றில் முடிச்சுகள் செய்து போட்டுக்கொள்ளுகிறுர்கள்.

இடையிற் சேர்க்கும் உலோகபில்லையும் கோர்க்கும் கம்பியும் பல உருத்திராக்கங்களின் மின்சாரத்தை ஒன்று சேர்த்தற்கும்,

பட்டுக்கயிறு, வில்வ ஓடு, சுரை ஓடு இவற்றின் பில்லைகள், முடிச்சுகள் இவைகள் உருத்திராக்கத்தின் மின்சார சக்தியைத் தனித்தனி பிரித்துச் சரீரத்தில் ஏற்றுவதற்கும் உபயோகமாகின்றன. உருத்திராக்கம் முள் முள்ளாய் பலாக்காயைப்போல இருப்பதால் மின்சாரசத்தி தேகத்தில் பாய்வதற்கு அனுகூலமாய் இருக்கிறது. மின்சாரத்தைப்பற்றி வாசித்த ஒவ்வொருவரும் மின்சாரம் கூர்மையான இடத்தை நோக்கும் என்பதை அறிவார்கள்.

## ஐந்தாம் இயல்.

### அணியும் இடம், முறை, காலம், அளவு முதலியன.

இதனடியில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் உருத்திராக்கம் அணியும் இடங்களும் அளவுகளும் பலவேறு புராணங்களில் கூறின பிரகாரம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

தணிகைப்புராணக்காரர் மாத்திரம் சிரங் கொண்டது, கரங் கொண்டது என்று எங்கெந்த இடம் எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு தரித்துக்கொள்ள விதித்தார்.

| இடம். | உபதேசகாண்டம். | பேரூர்ப்புராணம். | விருத்தாசல புராணம். | கடம்பவனபுராணம். | தணிகைப் புராணம். |
|---|---|---|---|---|---|
| 1. உச்சி ... | 1 | 1 | 1 | 1 | |
| 2. சிரம் ... | 40 | 36 | 36 | 36 | சிரங்கொண்டது |
| 3. காது ... | 6+6 | ... | 6+6 | 6÷6 | |
| 4. களம் ... | 32 | 32 | 32 | 32 | 32 |
| 5. புயம் ... | 32 | ... | ... | ... | |
| 6. மார்பு ... | 108 | 50 | 108 | 50 | நாபியினளவு |
| 7. கரம் ... | 24 | 16 | ... | 16 | கரங்கொண்டது |
| 8. மணிபந்தம் ... | ... | 12 | 12 | 12 | |
| 9. மனுவடம் ... | ... | 108 | ... | 108 | 108 |

உச்சி—ஒன்று. உச்சிக்குடுமி உள்ளோர் உச்சியிலும், பின்குடுமி உள்ளோர் பின்குடுமியிலும், சடைவளர்த்தோர் பின்புறம் சடையிலும் தரிக்க வேண்டும். எப்படித் தரித்தாலும் மண்டையில் படும்படி தரிக்கவேண்டும். மயிர் காந்த மின் சாரசத்திகளைக் கொண்டு செலுத்தாது. ஆகையால் மயிரின் பேரில் எவ்வளவு தரித்தாலும் பிரயோசனம் இல்லை.

சிலபேர் சடையைவளர்த்து உச்சியில் எறெடுத்து முடிந்து சிவலிங்க மாதிரிசெய்து அதன் பேரில் (மண்டையில் படாமல்)

உருத்திராக்கங்களை மாட்டுகிறார்கள். அந்த வேடம் பிறரை வஞ்சிக்கவே யொழிய பலன்கருதியன்று.

உச்சியில் தரித்தால் மூளைக்குச் சூக்கும மின்சாரத்தை அதிகப்படுத்தி அறிவை வளரச்செய்யும் அதிநுட்பமாக ஆராயும் அறிவு வளரும். கண், மூக்கு, நா, முதலிய இந்திரியங்களை நல்ல நிலைமையில் வைத்திருக்கும்.

பின்குடுமியில் தரித்தால் அது (Medulla Oblangata) சத்திசம் என்னும் இடத்தின் பேரில் படுகிறபடியால் நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுத்து அதன் மூலமாய் தேகத்தை வலுக்கச்செய்யும். அதனால் உற்சாகமும் கிளர்ச்சியும் உண்டாம். தேகம் பொன்னிறமாகும். ஏனென்றால் அந்தஇடம் நரம்புகளுக்குப் பிறப்பிடம்.

மொட்டையடித்துக் கொள்ளுகிறவர்களும், மயிர் வெட்டி (Crop) க் கொள்ளுகிறவர்களும் இந்தப்பயனை அடைவதில்லை. ஆகையாற்றான் எப்போதும் சிகை வைக்கவேண்டு மென்று சைவ ஒழுக்கநூல்களில் வற்புறுத்திக் கூறியது. இதனை அறியாது கூறுபவர் கூற்று ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல.

சிரம்—சிரத்தில் தரிக்க வேண்டியது 40 என்றும், 36 என்றும் சிரங்கொண்டது என்றும் பலவாறாகக்கூறுவர். எந்த இடத்தில் தரித்த போதிலும் நெல்லிக்காயளவு தரிப்பதுதான் உத்தமம். அவ்வளவு பருமனாயிருந்தால் 40 ஆக விருந்தாலும், 36 ஆக இருந்தாலும் இரட்டைச்சரமாகத்தான் போட முடியும். ஒருசுற்றுக்கு 18, 20 க்கு மேல் கொள்ளாது. எதற்கு இப்படி விதித்தார்களென்று யோசித்தால் அதிகமானசூக்கும மின்சாரம் மண்டை

---

நரம்பு - மூளைச் சத்துப்போகும் குழாய்.
நாடி -சுத்தமான இரத்தம் போகும் குழாய்.
நாளம் - கெட்ட இரத்தம் போகும் குழாய்.

சத்திசம் - சத்திகள் எல்லாம் பிறக்கும் இடம், அதாவது, நரம்புகளுக்கு உற்பத்தி ஸ்தானம்,

யில் ஏறினல் ஐம்பொறிகளுக்கும் இன்னும் தேகமுழுவதுக்கும் பலன் அதிக முண்டாகும் என்று தோன்றுகிறது.

காது—(6—6) அவ்வாறு மின்சாரசத்தியானது கூர்மையான இடங்களில் தான் சேரும் என்பதை எல்லாரும் அறிவர். காது மின்சாரசத்தி தங்குவதற்கு அநுகூலமாயிருப்பதால் அப்படி வந்து சேரும் சத்துகளை வெளியே போகவிடாமற்றடுத்துத் தேகத்திற் செலுத்தும் பொருட்டுக் காதின் முன்பக்கம் மூன்றும் பின்பக்கம் மூன்றும் இருக்கும் வண்ணம் கட்டிப் போட்டுக்கொள்ள விதித்தது.

இதற்கு "ஆறுகட்டி" என்று வழங்கக் காண்கிறோம்.

அதான்று, காதைச்சுற்றியும் மகரகுண்டலமாகவும், மச்ச குண்டலமாகவும், கவசகுண்டலமாகவும் செய்து ஆறு உருத்திராக் கங்களை அதிற் பதித்துத் தரிப்பதும் உண்டு. எல்லாம் இக்கருத் துப்பற்றியே.

சிலபேர் குண்டலங்களைப் பொன்னினாற்செய்து தரிக்கிறார்கள். இது பொன்னுக்குரிய குணத்தைக் கொடுக்குமே யல்லது வேறில்லை.

களம்—32. கழுத்தில் சுவாசாசயக் குழாயும், அன்னக் குழாயும் மூளைக் குழாயும் மூன்றும் இருப்பதை தேகதத்துவ நூல்வல்லார் அறிவர். நெல்லிக்காய்ப் பருமனுள்ள உருத்திராக்கம் 16 போட்டாலே கழுத்திற்கு ஒரு வரிசை ஆய்விடும். 32 விதித்ததின் காரணம் இரட்டை வரிசையாக இருக்க வேண்டு மென்னும் கருத்துக்கொண்டே. ஏனென்றால் சூக்கும மின்சாரம் அதிகமாய் ஏறினால்தான் மேற்சொன்ன மூன்று குழாய்களும் சுத்தப்பட்டு சுவாசத்தையும் அன்னத்தையும் மூளையையும் சுத்தப்படுத்தி மின்சாரத்தை யேற்றி உடம்பிற்கு உதவும்.

சிலபேர் உருத்திராக்கங்களுக்குப் பொன்கவசம் செய்து தரிக்கிறார்கள். அப்படித் தரிப்பதால் யாதொரு கெடுதியும் இல்லை.

ஏனென்றால் உலோகமானது மின்சாரத்தைக்கொண்டு செலுத்துமே யல்லது தடுக்காது.

சிலபேர் பொன்னாலேயே கண்டிகை செய்து தரிப்பது உண்டு. இதற்கு ஆக்கினேயமணி அல்லது பொன்கண்டிகைஎனப்பெயராம்.

" கண்டியரிதாகின் மண்ணாலே பணிக்கண்டி
கொண்டணிவார் மூவேழ்குலத்தோடும்
—பண்டைவினை.

வீட்டிவிண்ணுள் வரெனின் வியன் கண்டிக்குக்
காட்டிடுவாரார் பலத்தைக் கண்டு "
(மறை ஞானசம்பந்தர்)

என்று கண்டியரிதாகில் பிருதிவி சம்பந்தமான மண், மரம், கல் முதலியவற்றால் ஆக்கப்பட்ட உருத்திராக்கம் செய்து தரிக்க விதித்திருக்கின்றார். இதற்குப் பார்த்திவ ருத்திராக்கம் எனப் பெயர்.

உண்மையான உருத்திராக்கத்திற்கு உடம்பிலுள்ள சத்திகளை வெளியில் விடாமல் தன்னிடத்திலுள்ள சத்திகளை மெல்ல மெல்ல ஏற்றும் சத்தி உண்டு.

பார்த்திவருத்திராக்கத்திற்கு அப்பேர்ப்பட்ட சத்தி இல்லை. மண், மரம், முதலியன தெரிந்தெடுத்துச் செய்யவேண்டும். அதாவது சைனதேசத்துக் களிமண்போல மின்சாரத்தைத் தடுக்கக் கூடிய சத்திவாய்ந்த களிமண்ணாயிருக்க வேண்டும். மரமும் வில்வம், துளசி முதலியவைகள் போல் மின்சாரத்தைத் தடுக்க கூடியவைகளாய் இருக்கவேண்டும், கல்லும் பளிங்கு போன்று மின்சாரத்தைத் தடுக்க கூடியதாயிருக்கவேண்டும். எல்லாவித மண்ணும் மரமும் கல்லும் உதவா.

தற்காலம் மின்சாரத்தந்திகளைக்கட்ட களிமண்ணாற் செய்த சாமான்களை உபயோகிக்க நாம் பார்க்கவில்லையா? அதனுடைய கருத்தை நீங்கள் அறிந்திருப்பீர்களாதலால் நாம் கூறுவது மிகையாம்.

நாம் பள்ளிக்கூடங்களில் வாசித்த காலத்து மின்சாரத்தைப் பூமியில் போகவிடாமல் இருப்பதற்குக் கண்ணுடிக்கால்கள் வைத்த முக்காலியில் நிற்பதை அறியீர்களா? ஆகையால் பளிங்கும் கண்ணுடியினமானதால் மின்சார விரோதியென்றே அறியுங்கள். (மின்சாரவிரோதி - Bad Conductor of Electricity.)

வில்வம், சுரை, துளசி முதலியவைகளும் மின்சார விரோதியே.

ஆகையால் இவைகளினுல் உருத்திராக்கம்போல் செய்து தரித்துக்கொண்டால் தேகத்திலுண்டாகும் காந்த மின்சாரசத்திகளைவெளியே போகவொட்டாமல் தடுத்து, தேகத்தில் மிகுதியாயிருக்கும் மின்சாரத்தைத் தான் ஏற்றுக் கொஞ்சம் கொஞ்சமாய் வேண்டும்போது கொடுக்க உதவியாயிருக்கும் என்னும் உத்தேசம் கருதியே.

சிலபேர் முழுவதும் பொன்னுலாயே கண்டிகைசெய்து தரிப்பது வழக்கம். அது அவ்வளவு சிறந்ததல்ல. ஏனென்றுல் மின்சாரத்தை வெளியில்போகவொட்டாமல் அது தடுக்காது. அழகேயொழிய வேறில்லே. பொன் அக்கினியின் கூறென்று வாதராச்சியம், நியாயசாரேயம், நீலகண்டீயப் பிரகாசிகை முதலிய நூல்கள் கூறும். மாதவப்பெருந்தகைச் சிவஞானயோகிகள் கருத்துமிதுவே.

பொன் அக்கினியின் கூருதலால் தேகத்துக்கு உஷ்ணத்தைக் கொடுத்து அழகுபெறச்செய்யும்; வேறில்லே.

புஜம்—32 தரிக்க விதித்திருக்கின்றது. புயம் என்பது மேல்கைபூட்டு இருக்கும் இடம். கை எப்போதும் ஆடிக்கொண்டிருப்பதால் துர்நீர் தங்குவதைச் சுத்தப்படுத்த விதித்தது. இரட்டை வரிசையாகத் தரிக்கவேண்டும்.

மார்பு—108 அல்லது 50 தரிக்க விதித்தது. இஃது இடசாரி வலசாரியாகத் தரிப்பது. இப்படித்தரிப்பதால் உருத்திராக்கமாலேயானது இருபுறமுள்ள சுவாசாசயங்களிலும், வயிறு, மூத்திரக்

குண்டிகள், நுரையீரல், கல்லீரல் முதலிய உட் கருவிகளின்மேல் படுகிறது. அப்படிப்படுவதால் அககருவிகளுக்கு காந்தமின்சார சத்திகள் ஏறுகின்றன. ஏறவே அக்கருவிகள் சுத்தப்பட்டு தத்தம் வேலைகளை வியாதியின்றிச் செவ்வனேசெய்கின்றன.

கரம்—24 அல்லது 16 தரிக்க விதித்தது. இஃது முழங்கை யில்தரிப்பது. இதுவும் முழங்கையில் உண்டாகும் துர்நீரைச் சுத் தப்படுத்தும்பொருட்டு இதுவும் இரட்டை வரிசையாகத் தரிக்க வேண்டும். ஒருவரிசை மேல்கையில் படும்படியாகவும் இன்னொரு வரிசை கீழ்க்கையில் படும்படியாகவும் தரிக்கவேண்டும். வரிசை மாறுதல் உட்புறம் மடிப்பில் இருக்கவேண்டும். இப்படித் தரித் தால் மேல் கை கீழ்க் கைகளிலுள்ள இரத்தத்தைச் சுத்தப்படுத்தி மடிப்பிலுள்ள துர்நீரை அறவே ஒழித்து நன்மைபயக்கும்.

மணிபந்தம்—12 தரிக்க விதித்தது. மணிக்கட்டில் ஒவ் வொன்றிலும் 8 சிறிய எலும்புகுண்டுகள் அசைவிற்கு அனுகூல மாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளின் அசைவினால் ஏற்படும் துர்நீரையும் விரல்களுக்குப்போகும் இரத்தத்தையும் நாள நரம்புகளையும் சுத்தப்படுத்தும்.

இதுகாறும் அணியும் இடங்கள், அளவுகள், காரணங்கள் முதலியவற்றைக் கூறினம்.

இனி அணியும் முறை கூறுவாம். எவ்வெத்தானங்களுக்குஎவ் வளவு சொல்லப்பட்டதோ அவ்வளவுதரிக்க முகம் முகத்தைப்பொ ருந்தவும், அடி அடியைப்பொருந்தவும் இடையிடையே பொன்னு யினும், வெள்ளியாயினும், தர்மீரமாயினும், முத்தாயினும், பவள மாயினும், பளிங்காயினும் இட்டு வெண்பட்டிலேனும் பருத்தி யிலேனும் இருபத்தேழு இழையினலாகிய கயிற்றிற்சேர்த்து நுனி யிரண்டையும் ஒன்றாகக்கூட்டி அதிலே நாயகமணியை ஏறிட்டுக் கோத்து முடிசெய்து தரிக்க.

---

"முகமுகமுஞ்செறிய விடைமுடிந்து மேருவுமமைத்து
முறையிற்கொள்வார்" (பேரூர்ப்புராணம்)

பொன்வெள்ளி தாமிர முதலிய இவற்றையிடாது நாகபாசம், பிரமக்கிரந்தி, சாவித்திரி என்பவைகளுள் இயன்ற முடிச்சை யிடுதலுமாம்.

**நாகபாசமாவது**—கயிற்றின் இருநுனியையும் எடுத்து நாலங்குல வளவிற்றனித்தனியாய் வலமாகவும் இடமாகவும் இருமுடிச்சிட்டு, அந்த நுனியைப்பாம்பினது படம்போல முடிச்சில் அகப்படும்படி முடிவதாம்.

**பிரம முடிச்சு**— நுனிகளிரண்டையும் மூன்றங்குலமெடுத்து அவ்விரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்துப் பிரதட்சிணக் கிரமமாய்ச் சுற்றி அந்நுனி வெளியில் தெரியாதபடி முடிவது.

**சாவித்திரி**—இரு நுனிகளையும் வலமாகவும் இடமாகவும் நுனி வெளியில் தெரியாதபடி ஒரே முடிச்சுப்போல முடிவது.

மேற்கூறிய வண்ணம் தரிப்பதற்கு முன்னம் உருத்திராக்க மணியை, கண்டிகையை, மாலையை சத்தியோசாதத்தினல் மஞ்சன மாட்டி, வாமத்தால் தகமநித்து, அகோரத்தால் தூபம்காட்டி, தற்புருடத்தால் ஆடையால் ஈரந்துவட்டி, ஈசானிய முதலிய பஞ்சப் பிரம மந்திரத்தால் எத்தனைமணி உள்ளதோ அத்தனை மணிக்கு மணி ஒன்றுக்கு 100 உரு ஆகஜெபித்து எடுத்து அணிய வேண்டும் இது ஒழுக்கநூற் கூற்று.

## தரிக்கும் காலங்கள்.

சிவமந்திரசெபம், சந்தியாவந்தனம், சிவ பூசை, சிவத்தியானம், சிவாலயதரிசினம், சிவபுராணபடனம், தேவார திருவாசக பாராயணம், அவை கேட்டல், தீர்த்தமாடல், விரதமனுட்டித்தல், சிராத்தம்செய்தல் முதலிய நற்கருமங்களைச் செய்யுங்காலத்து ஆவசியமாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும்.

---

சத்தியோசாதத்தாட்டி வாமத்தாற்றகமதித்த கோரத்தாற்றூபம்
பத்தியினளித்துப் பகர்புருடத்தாற்பைய வாடையிற்புனலுலர்த்தி
சுத்தயீசான மனுமுதலாகச்சொல்லிய பிரமமோரைந்தும்
வைத்திமெணி யொவ்வொன்றுக்கு நூறுவரிலசயினுரைத்தெடுத்தணிக
(தணிகைப்புராணம்)

## தரிக்கலாகாத காலங்கள்.

சயனிக்கும் காலத்தும், மலசல விமோசனத்தும், புணர்ச்சியினும், நோயினும், சனனசௌசம், மரணசௌசம் என்னுமிக் காலங்களிலும் உருத்திராக்கதாரணம் செய்தல் ஆகாவாம். ஆயினும் சிகையினும், காதுகளினும், எப்போதும் தரித்துக்கொள்ளலாம். ஒரு உருத்திராக்கம் கழுத்தில் கட்டியிருப்பவர்களும் எப்போதும் தரிக்கலாம்.

" எவ்வரியநற்குலமு மெக்குலமுமென்றும்
கொள்ளுவது நன்றணியி னஞ்சுபதங்கூறி "

(விருத்தாசலப்புராணம்)

தரிக்கலாகாதகாலங்களில் உருத்திராக்கம் தரிப்பதால் உருத்திராக்கங்கள்மீது மாசுபடிந்து அவைகளின் குணத்தை மலினப்படுத்தும் ஆகையால் கூடாதென்றது.

தரிக்குங்காலங்கள் எனச்சிலவற்றைச் சிறப்பாக எடுத்துக் கூறினதின் காரணம் எப்போதும் தரியாதவர்களும் உலகவிவகாரர்களும் அக்காலங்களிலாவது தரிக்கவேண்டும் என்பதே.

உருத்திராக்கங்களை இன்னார்தான் தரிக்கவேண்டும் இன்னார் தரிக்கக்கூடாது என்ற நியமம் இல்லை. எல்லோரும் எல்லாசாதியரும் எல்லா மதத்தினரும் மிருகஜாதிகளும் பக்ஷிஜாதிகளும்கூட தரிக்கலாம்.

" இழிஞராகமற்றவர்களேந்திழைநலராக
கழிகளுண்முதல் கழித்துனுமாந்தர்களாக
மொழியும்வான்மணி முடிமிசை தரித்தனராயின்
அழியுநீள்வினையக்கி யினமகருந்பெறுவவர்

பேரூர்ப்புராணம்.

என்னும்பாசுரப்படி எல்லோரும் அணிய விதித்திருப்பதை நோக்க

உருத்திராக்கத்தில் நன்றாய்விளைந்தனவும், நெல்லிக்காய்ப்பருமனுள்ளனவும், பொன்னிறமுள்ளனவும், மிக்க சத்துள்ளன என்று

நூல்களில் கூறப்பட்டிருக்கிறதே யொழிய வெண்மை நிறத்திற்கு இன்னகுணம், பொன்னிறத்திற்கு இன்னகுணம், செந்நிறத்திற்கு இன்னகுணம். கருநிறத்திற்கு இன்னகுணம் என்று யாண்டும் கூறப்படவில்லை.

விபூதியைப்பற்றி அவ்வாறு கூறக்கேட்டிருக்கின்றோம்.

ஆகையால் உருத்திராக்கத்தில் ஒரேநிறந்தான் பலநிறங்கள் விளைவின்பேதமேயொழிய வேறின்று என்று கொள்ளக்கிடக்கிறதன்றோ? இதுவும் நாம் இரண்டாம் இயலில் கூறின சங்கதியை வலியுறுத்தும். அப்படியிருக்க வெண்மைநிறமணி அந்தணசாதியெனவும், பொன்னிறமணியும் சென்னிறமணியும் க்ஷத்திரிய சாதியெனவும் வெண்மை பொன்மை கலந்தமணியும் கபிலநிறமணியும் வைசியசாதி யெனவும், கருநிறமணி சூத்திரசாதியெனவும் கூறினது, ஆரியர்களுடைய பிரிவினைஎன்பது வெள்ளிடைமலையேயாம். இப்படிப்பிரித்ததால் யாது பயன்பெற்றார்களோ அறியோம். பிரயோசனமற்றது என்று ஏற்பட்டதேயொழிய வேறில்லை.

## மனுவடம்.

(1) விரல் இறை, (2) புத்திரசீவமணி, (3) சங்குமணி, (4) படிகமணி, (5) முத்து, (6) தாமரை மணி, (7) பொன்மணி, (8) குசைமுடி, (9) கண்மணி, (உருத்திராக்கம்).

இவை ஒன்றுக்கொன்றுயர்வு.

" விரலிறைபுத்திரசீவஞ் சங்குமணி படிகமணி
விளங்குமுத்து
மரைமணி பொன்மணி குசையின்வண் முடிகண்மணி
யென வகுத்த வெல்லாம்
பரவுமனுக்கணிப்பதற்காம் முறையேயொன்றனுக்
கொன்று பயன்மிக்காகும்
குரவமலி நறுங்குழலாய் ஆதலினாற் கண்மணியே
கொள்வர் சான்றோர் "

(பேரூர்ப்புராணம்.)

ஆகையால் உருத்திராக்கத்திஞலேயே மனுவடம் அமைக்க வேண்டும் என்பதாயிற்று.

மனுவடம் எவ்வளவினதாக இருக்கவேண்டுமென்றால் :—

“ முத்திநெறிக் கையைந்துமணி
மூவெண்பான்மணி சோபனத்துக்கின்ப
மெத்துநிதிக் கொருமுப்பான்மணி யவிசாரந்
தனக்குவிளம்பு மூவைந்து
இத்திரத்தின் வெவ்வேறு வடமியற்று
வாரறிந்தோர் இலங்குவேற்கட்
பைத்தமணி யரவல்குற்பைந்தொடிக்கைத்
தரளநகைப் பவளவாயாய் ”

என்னும் மேற்கோளால்

முத்தியை வேட்டோர் 25 மணியாலும் சோபனத்தை வேட்டோர் 27 மணியாலும் செல்வத்தை வேட்டோர் 30 மணியாலும் அவிசாரத்தினை வேட்டோர் 15 மணியாலும் செபமாலை அமைத்துக்கொள்வது முறையெனக்காண்க.

செபமாலைக்கு இரண்டு, மூன்று, பன்னிரண்டு, பதின்மூன்று முகமணிகள் ஆகாவாம் என்று காமிகாகமம் கூறுகின்றது.

108, 54, 27 என்னும் அளவினவாய மணிகளாற் செபமாலை செய்வதும் பொதுவிதியாகும்.

செபமாலையை நாயகமணியில்லாமற் செய்வதும் உண்டு. அதனுற்பாவம் இல்லை. பலன் அதிகமில்லையே ஒழிய வேறில்லை.

செபிக்கும்போது மணி ஒலியாமலும் பிறர் விழிப்படாமலும் மனு கணிக்கவேண்டும்.

மேருவிருந்தால் மேருவினைத்தொடுத்துக்கணிக்க ஆரம்பித்து மேரு வருங்கால் அதனைக்கடக்காது வடம் திருப்பல் வேண்டும்.

அனுமிகையிற் செபித்தால் நோய் நீங்கும்.
மத்திமையிற் ,, பகை ,,
தர்ச்சனியிற் ,, முத்தி சித்திக்கும்.

முத்தியை விரும்பினவர் மேலாகவும்
போகத்தை விரும்பினவர் கீழாகவும்
வடத்தை மறிப்பர்.

மனுக்கணிப்பதற்கு (1) மனை, (2) பசுக்கோட்டம், (3) நதி, (4) ஆலயம், (5) வனம், (6) மலை, (7) சந்நிதி இந்த இடங்கள் ஒன்றுக்கொன்று உயர்வாகும்.

சிவபெருமான் சன்னதியில் கணிப்பதுதான் அளவிலாத பயனை அளிக்கும்.

மேற்சொன்ன இடங்களெல்லாம் ஒன்றைவிட ஒன்று சுத்தமானதாயும் மனதைத்தெளியப்படுத்தக்கூடியதாயும் மனிததேகத்திலுள்ள சூக்கும மின்சாரங்களை அதிகப்படுத்தக்கூடிய இடங்களாயும் இருக்கின்றன. இதனைஉள்ளிட்டே பயன் அதிகம் என்று கூறினது.

---

"வடநடத்திலனுமிகையின் மத்திமையிற்றர்ச்சகனியின் மலிநோய்பாறும்
படர்சினத்தெவ்வர்களிறப்பர் பரலோகவீடெய்தும் பசும்பொற்பாவாய்
உடல்வெறுத்தார் மேன்மறிப்பர்கீழ்மறிப்பர் நெடும்போக முறுதல்வேட்டோர்
கடவுண்மணி ஒலியாமற் பிறர்விழிக்குப்படாமன் மனுக்கணிப்பதாகும்.

பரசிவன்பூசைபுரைய நாயகத்துப்பண்பொடு பூசனைபுரிந்து
பரர்விழிப்படாமை ம்ணியொலியெழாமைப்பரனுரு உளத்திடையிருத்தி
பரவுமந்திரங்கணுயகமணி முன்பற்றியெண்ணுக மறந்தேனும்
பரநனிவழங்குநாயகங்கீழாப் பயிலுறவணியல் பார்த்திவனே.

(தணிகைப் புராணம்)

மனையினுறும்பயன் பசுக்கோட்டத்தொருபதாநதியின் மருங்குநூறும்
தனைநிகராலயத்து ளொராயிரம் வனத்திலிலக்கம் வரைதன்னிற்கோடி
நனையொழுகு மலர்த்தொடையாய் நமதுதிருமுன்னிடத்தினவிலவொண்ணுது
அனையமணிவடமெடுத்து முறையுளிமந்திரங்கணிப்போர்க் ககிலத்தம்மா

(பேரூர்ப்புராணம்.)

## திக்கின் பலன்.

உத்திராக்கமணி கொண்டு செபிக்கும்போது:—

| | | | |
|---|---|---|---|
| கிழக்கு நோக்கியிருந்தால் | | ... | உலகவசியம். |
| தென்-கிழக்கு | ,, | ... | வியாதி. |
| தெற்கு | ,, | ... | அபிசாரவிருத்தி. |
| தென்-மேற்கு | ,, | ... | துவேஷம். |
| மேற்கு | ,, | ... | தனலாபம். |
| வட-மேற்கு | ,, | ... | ஆகருடணம். |
| வடக்கு | ,, | ... | சாந்தி. |
| வட-கிழக்கு | ,, | ... | முத்தி. |

இவைகள் உண்டாம் என்று நூல்கள் கூறுகின்றன.

சூரியகிரணங்களையும், சந்திரகிரணங்களையும், கிரகங்கள் நட்சத்திரங்கள் இவைகளின்கிரணங்களையும்,வாயுவின்கதியையும் குறித்துத்திசைகள் விதித்திருக்கின்றனவென்று வெளியாகிறது. இவற்றி ன்விரிவெல்லாம் வானசாஸ்திரமாம்.

## ஆசனம்.

உருத்திராக்கமணி கொண்டு செபிக்கும்போது போட்டுக் கொள்ளும் ஆசனமும் அதன் பலமும் கூறுதும்:—

| | | |
|---|---|---|
| கிருஷ்ணாசனம் (மான்தோல்) | ... | ஞானம். |
| புலித்தோல் | ... | முத்தி, இலக்குமீகரம். |
| பருத்திநூல் வஸ்திரம் | ... | வியாதி நிவிர்த்தி. |
| கம்பளம் | ... | சௌக்கியம். |
| சித்திரக்கம்பளம் | ... | அறம்பொருளாதி. |
| வேணு ஆசனம் (மூங்கிற்படல்) | ... | தரித்திரம். |
| பாடாண ஆசனம் (கல் ஆசனம்) | ... | வியாதி. |
| பூமி ஆசனம் | ... | துக்கம், மந்திரநிர்ப்பலம். |
| தாருகாசனம் (தரு=மரம்) | ... | கேடுகள், வியாதிகள். |

திரணாசனம் ... புகழ் நசிவு.
பல்லவ ஆசனம் ... சித்தப்பிரமை.
கறுப்பு வத்திர ஆசனம் ... அபிசாரக்கிரியை.

இவைகளை உண்டாக்குமென்று மதங்கஆகமம் கூறுகின்றது

ஆகையால் மரப்பலகையில் உட்காருவது கூடவே கூடாது என்று எற்பட்டது.

கருமானுரி ஞானவிர்த்தியினைக்காட்டும்
வரிவேங்கைத்தோன் முத்திவாய்க்கும்—உரமுடைய
கம்பளம்துன்பங்களையும் இழைக்கலிங்கம்
வெம்புமுடனோயினைவீட்டும்.
மரப்பலகையாக்கும் வறுமையினைவன்கல்
வருத்தும் பிணியால் வடிவை—உரத்தநிலம்
துன்பந்தருமிவற்றை யெல்லாம்துறந்துறைக
அன்புடன்முன் சொன்னதனத்து.

(உருத்திராக்க விசிட்டம்.)

ஆகையால் மேற்காட்டிய ஆசனங்களில் கூடியதொன்றைக் கொண்டு சுகாசனமாய் இருந்துகொண்டு செபிக்க.

சுகாசனமானது 84 வித ஆசனபேதங்களில் எதுமுடியுமோ எது சௌகரியமாயிருக்கிறதோ அது.

எல்லோருக்கும் பதுமாசனமும், குக்கிடாசனமும், வீராசனமும் சுகமாயிருக்கும்.

செபமாலையிலுள்ள நாயகமணி யென்னும் மேருவானது எண்ணிக்கையிற் சேராது.

## செபிக்கக்கூடாத இடங்கள்.

நாற்றெருக் கூடுமிடத்திலும், படுக்கையிலும், நடந்து கொண்டும், நின்றுகொண்டும், இருளினும், அசுத்த பூமியினும், வாகனத்தின் மேலும் கூடாது.

செபிக்கும்போது அங்கிதரித்தலும், தலையில் வத்திரம் அணிதலும், குடுமியை விரிந்துவிடலும், கௌபீனம், பவித்திரம் இவை யணியாமல் செபித்தலும், வார்த்தையாடலும், மேலே வேட்டி தரித்திருத்தலும், ஆசாரமில்லாதிருத்தலும், கோபப்படுதலும், நகைபுரிதலும், தும்மலும், சோம்பலும், காறியுமிழ்தலும், சண்டாளரைப் பார்த்தலும் கூடாவாம்.

இவைகள் நேர்ந்தால் ஆசமனம் புரிந்து, அங்கநியாசம் செய்து செபிக்க.

உருத்திராக்கங்கள் ஒன்று முதல் 16முகம் வரை இருப்பதாயும் ஒன்றுக்கொன்று சத்து வித்தியாசப்பட்டிருப்பதாயும் இரண்டாவது இயலில் காட்டப்பட்ட அட்டவணையால் அறிகிறோம்

மூன்றாவது கலத்தில் கண்ட குற்றங்களானவை ஒருவனுக்கு மனத்தின் கண் ஏற்பட்ட மாசு எனமனோதத்துவநூல் வல்லார் கூறுவர். இம்மாசானது பல அடுக்குகளை (Layers) க்கொண்டதாயிருக்கும் அது ஒருவனுடைய பாபச்செய்கைகளுக்குத் தகுந்த பிரகாரம் இருக்கும். மாசுபடிவதற்குக்காரணம் தேகசுத்தியும் மனோசுத்தியும் இன்மையே, அம்மாசானது பலவிதமான வாசனைகளை உடையதாயிருக்கும. அது சூக்கும தேகத்தில்தான் நன்றாக வெளிப்படும். அவ்வாசனைகளுக்குத் தகுந்த பிரகாரம் இட்டபெயர்களே கொலை முதலிய பாதகங்கள்.

அவ்வாசனைகளைப் போக்குவதற்குப் பலவிதமான சத்துக்கள் அமைந்த உருத்திராக்கம் தேவையே. ஆகையாற்றான் உருத்திராக்கம் தரித்தால் அக்குற்றங்கள் நீங்குகின்றன என்று கூறுவது.

உருத்திராக்கங்களிலுள்ள முகங்களும் முள்களின் அளவுகளும் வித்தியாசப்படுவதுபோல அவைகளின் சத்தும் வித்தியாசப்பட்டு அவ்வக்குற்றங்களை நீக்கக்கருவியா யிருக்கின்றன.

தாவரவர்க்கங்களின் குணகுணங்களை அதிநுணுக்கமாய் ஆராய்ந்து எழுதிய தமிழர்களின் அறிவையும் ஆராய்ச்சியையும்

என்னென்பேம். உலகமெல்லாம் உய்வதற்கு எழுந்தருளும் ஒரு தனிச்சுடரே யென்பேம் அத்தமிழரை.

என்கொனதி பற்பல வெதிர்ந்தடைவின் மூழ்கல்
என்கொல்பரிவேள் விழுதலியாவையுமியற்றல்
என்கொலெழுகோடிவித மந்திரமு மெண்ணல்
என்கொறவமென்று கனலேந்திடையிருத்தல்

இத்துணையுநல்குபலம யாத தனிலெண் கூறு
ஒத்தபலம் நல்குவது ருத்திரவிழிப்பேர்ச்
சுத்தமணி யென்றுரிய தொல்லை முனிவோராம்
வித்தகர் தரிப்பர் இதில் வேறு பொருளுண்டோ
(பிரமோத்தரம்)

RU1
N18

முற்றும்.

சென்னை-600 008
142895

## Tamilian Religious Law Books' Series.

# புதிய முறையில் எழுதப்பட்ட புத்தகங்களின் வரலாறு.

### (1) ஒழுக்க நூற்பிரிவு—க.

**விபூதிவிளக்கம்**—இஃது திருநீற்றின் வரலாற்றை இனிது விளக்குவதுடன் ஆரியர்களுடையவும், தமிழர்களுடையவும் ஆசாரங்களைத்தனித் தனி பிரித்துக்காட்டுவது. சரித்திர சாத்திர ஆதாரங்களுடன் உள்ளங் கை நெல்லிக்கனிபோல் தெளிவானஇனிய தமிழ்நடையில் எழுதப் பட்டுள்ளது. பலநூல்களிலும் பலநாள் துருவித் தெரிந்துக்கொள்ளக் கூடியசங்கதிகளை இந்நூலினை ஒரேதடவை வாசிப்பதால் தெரிந்து கொள்ளலாம். இஃது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது.

இதன்விலை அணு 0-4-0.

### (2) ஒழுக்க நூற்பிரிவு—உ.

**உருத்திராக்க விளக்கம்:**—இஃது உருத்திராக்கத்தின் வரலாற்றினை மருத்துவநூன் முறையாகவும் பௌதிக (Science) சாத்திர முறையாகவும் தெளிவாக விளக்கிக்காட்டுவது. "உருத்திராக்கம் ருத்திரன் கண்ணினின்று உற்பத்தியாயிற்று" என்னும் ஆரியர் புராண வரலாற்றினைக் கட்டுரையெனக் காட்டி உண்மையிற்றெனத் தெரிவிப்பது படிக்கப் படிக்க புதுமையாக விளங்குவது. உண்மையை அறியவிரும்பும் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய ஒப்பற்ற ஒரு தனி நூல்.

இதன்விலை அணு 0-4-0.

### (3) ஒழுக்க நூற்பிரிவு—ரூ.

**மாகேசுரபூசை விளக்கம்:**—இஃது மாகேசுரர் இன்னர் என்பதையும் அவரைப்பூசிக்கவேண்டிய முறையையும் இனிது தெரிவிப்பது. பூசா காலத்தில் சொல்லவேண்டிய ஆசிர்வாதங்களைத் தமிழர்முறையில் விளக்குவது. இஃது மாகேச பூசை குருபூசை முதலியவைகள் செய்யும் அன்பர்கள்பொருட்டே செய்யப்பட்டது. இதுவும் சைவர்களுக்கு இன்றி மையாதது. இதுவும் ஆரியஸ்மிருதிகளை ஒட்டி எழுதினதல்ல (பி... மணபோசனம்), சந்தர்ப்பனை செய்ய சைவநூல்களில் விதியில்லை... பதைத்தெளிவாக பிரமாண ரூபமாகத் தெரிவிப்பது.

இதன்விலை அ...

## Tamilian Philosophical Books' Series.

(4) ஞான நூற்பிரிவு—க.

**சிவஞானபோத முதனூல் விளக்கம்:**—இஃது சிவஞானபோதம் முதனூல் என்பதையும், அது தமிழாலேயே ஆதியில்செய்யப்பட்டது என்பதையும், தேவபாஷை தமிழ் என்பதையும், சிவஞானபோதம் மொழிப்பெயர்ப்பு நூல் என்னும் கொள்கை மயக்கவுணர்ச்சி என்பதையும், சம்ஸ்கிருதபாஷையின் மூலமாகிய ஆரிய பாஷை பேசும் ஆரியர்கள் இத்தமிழ்நாட்டிற்கு வருவதற்கு பல நூறாயிரவாண்டுகளுக்கு முன்னரே தமிழும் சிவஞானபோதமும் இத்தமிழ்நாட்டில் உலாவின என்பதையும் பலருடைய ஆக்ஷேபணைகளுக்குச் சமாதானத்துடன் விளக்குவது. தமிழர் ஒவ்வொருவரும் வாங்கி அவசியம் பார்க்கவேண்டிய நூல்.

இதன் விலை அணு 0–4–0.

## Tamil Language and History Series.

(5) வரலாற்று நூற்பிரிவு—க.

**திருநத்துடிசைப் புராணம்**—இஃது கொங்குநாட்டின்கண் சுந்திரமூர்த்தி நாயனாராற் பாடற்பெற்ற ஒரு சிறந்த ஸ்தலத்தின் வரலாற்றைக்கூறும் நூல். பாக்களால் அமையப்பெற்றது. பாக்களின் சுவையும், தமிழின் இனிப்பும், பொருள்களின் அமைப்பும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியது. இதுவரை வெளிவராதபுராணங்களில் இது ஒன்று.

இதன்விலை அணு 0–12–0.

புத்தகம் வேண்டுபவர்கள் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். மேலேகண்ட 5-ம் சேர்த்து வாங்குகிறவர்களுக்கு ரூ. 1—8—0 க்கு வி. பியில் அனுப்பப்படும்.

(1) செக்ரிடேரி,
சைவசித்தாந்த சபை,
உத்திரன் மேரூர்.

(2) செக்ரிடேரி,
சைவசமயாபி விருத்தி சபை,
செங்கல்பட்டு.

சென்னை-600 006.